www.tamilarangam.net

# சர்வதேசதமிழர்

SARVADESA TAMILER




புதுச்சேரியில் ஈழத்தமிழர் பாதுகாப்புமாநாடு



ஜார்ஜ் பெர்னாண்டஸ்



றூனே ராஜேந்திரம்

சிவ் ராஜேந்திரம்




ஈழத்தமிழர்க்கு குரல்தரும் தலைவர்கள்



குட்டிஅங்கிள்–மகன் றூனே

Norway Tamil magazine to co-ordinate the Tamils for advancement and solidarity.

தமிழர்களை முன்னேற்றம், ஐக்கியம் கருதி ஒன்றிணைக்கும் நோர்வே தமிழ்ச் சஞ்சிகை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சர்வதேசதமிழர் களம்:

**அன்புள்ள ஆசிரியருக்கு,**

சர்வதேசதமிழர் பரந்துவாழும் தமிழ்பேசும் மக்களை ஒருங்கிணைக்கும் பாலமாக, அமைந்திருப்பது கண்டு மகிழ்ச்சி அடைகிறேன்.ஆற்றல்கள்,கருத்துக்களை சகலதமிழரும் சுதந்திரமாக வெளியிட சந்தர்ப்பம் வழங்கியமைக்கு நன்றி! தொடர்ந்தும் தகவல்,அறிவுபெறவும், சந்தாதாரராகி ஆதரவு தரவும் விரும்புகிறேன்.மேலும் உயர்ச்சிபெற எம் வாழ்த்துக்கள்!! சர்வதேசதமிழரில் தொகுப்புகள்,தகவல்கள்கூடினால் மிகவும்நல்லது.இங்கு அதிகம் தமிழர்களில்லை.

வேறு எந்த தமிழ்ப்பத்திரிகைகளும் இங்கு கிடைப்பதில்லை.சர்வதேசதமிழர் கிடைத்தது பெருமகிழ்ச்சி! எந்த தமிழ்நிகழ்ச்சிகளும் இங்கு,கொண்டாடப்படுவதில்லை.இங்கு–பின்லாந்தின்,தலைநகரான கெல்சிங்கியில் சுமார் 10 தமிழர் இருக்கலாம்.அதில் ஒருசிலரைத்தான் தெரியும். கெல்சிங்கியிலிருந்து 1000 கி.மீ.இல்,நோர்வே எல்லைக்கு கிட்டவாக றேவமேமி(இங்குதான் உண்மையான சந்தாகுளோஸ்–கிறிஸ்மஸ்தாத்தா இருப்பதாக இவர்கள் நம்புகிறார்கள்)–யில் சுமார் 50 தமிழர் உள்ளனர். ஒருதடவை நான் அங்கு போயிருக்கிறேன்.அங்குதான் எதையும் கூட்டாக செய்யலாம். அங்கு கெல்சிங்கியை விட குளிர்கூட.ஆனால் ஒஸ்லோவைவிட கெல்சிங்கியில் குளிர்கூட என கூறுகிறார்கள். கெல்சிங்கியில் இருப்பது வேறுநாடுகட்கு பிரயாணம் செய்வதற்கு சுலபம்.இங்கு வேலைவாய்ப்பு குறைவு.தமிழர்கள் குறைவு என்பதால் இங்கு வருபவர்கள் தங்குவதில்லை.வேறுநாடுகட்கு போய்விடுவர்.நான் 3 மாதங்கட்கு முன்புதான் கெல்சிங்கி வந்தேன். அதற்கு முன் ரஷ்ய எல்லைக்கு கிட்டவுள்ள, யோன்சு நகரத்தில் சீவித்தேன். கெல்சிங்கியில் வீடு எடுப்பது சிரமம்.தற்போது ஒரு தமிழ்நண்பருடன் தங்கியுள்ளேன்.கெல்சிங்கியில் 3மாதம் தங்கியிருந்தால் வீட்டுக்கு விண்ணப்பிக்கமுடியும்.விண்ணப்பித்தும் 6மாதம் காத்திருக்கவேண்டும்.இங்கு சட்டதிட்டங்கள் மிகஇறுக்கம்!நம்,இலங்கைநிலைமை சீராகும்வரை,எங்காவது, சீவித்துதான்ஆகவேண்டும்.மீண்டும் சந்திப்போம்!!

**அன்புடன்,**

**–வி.சிவரூபன், கெல்சிங்கி, பின்லாந்த்**

---

**அன்பு ஆசிரியருக்கு,**

சர்வதேசதமிழர் கண்டு அகமகிழ்ந்தேன்.நியுசிலாந்த் வந்து 4 மாதத்துள் இங்குள்ள பன்னாட்டு முதலீட்டுக்கம்பனியில் திறைசேரி அதிகாரியாக பணியேற்றுள்ளேன்.பொதுவாக இங்கு பாரியதொழில்துறை இல்லாததாலும்,சிறியநாடானதாலும் வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்கள் குறைவு.இந்தியாவிலிருந்து இங்குவரும் நண்பர்கள் அதிகஎதிர்பார்ப்புடன் வந்து, மனமுடைந்து,திரும்பிப்போவதுமுண்டு. இங்கு குளிர்காலம் ஆரம்பமாகியுள்ளது. இங்கு பல தமிழ்ச்சங்கங்கள் இருப்பினும்,அவர்களிடையே,ஒத்துழைப்புகுறைவு.சர்வதேசதமிழர்,நியுசிலாந்த்சிறப்பிதழ் முயற்சிகள் நடந்துகொண்டுள்ளன. தமிழ்ஒளி எனும் இருமாதஇதழ்,அண்மையில் இங்கு,மலர்ந்துள்ளது. சர்வதேசதமிழரின் கேட்டீர்களா சேதி! மிகவும் பயனுடையது!வாழ்த்துக்கள்! பாராட்டுக்கள்!!தொடர்ந்து வெளியிடவேண்டுகிறேன்.உ.த.ஆ.காப்பகம்– கனகரத்தினம் அவர்களது சேகரிப்பு, தமிழ்நாட்டில் அமெரிக்கா வாங்கிய ரோஜா முத்தையா பொக்கிசத்தை நினைவூட்டியது. என்பாராட்டுக்கள்!–**மாயூரம் பாஸ்கரன் சுப்ரமணியன், ஆக்லாந்த், நியுசிலாந்த், (தொ.பே.64.9.6241880)**

(நியுசிலாந்த்–வேறுநாட்டு,நகர,விடயசிறப்பிதழ் ஆக்கங்களை யாரும் சிறப்பாசிரியராக தயார்செய்து அனுப்பலாம்–ஆர்)

---

**அன்பு ஆசிரியநண்ப,**

வணக்கம்! சந்தித்தோம்,பிரிந்தோம் என்று,இருந்துவிடாது, எம்மைத்தேடிவந்த சர்வதேசதமிழர் இதழ்கள் அனுப்பியமைக்கு நன்றி!மிகவும் கவலையும்,ஏமாற்றமும் தந்தவிடயம் ஒன்று–தமிழ்இதழ்சேகரிப்பாளர் தி.மா.சரவணன் பேட்டியை தந்த நீங்கள் அவரது முகவரியை தராதது ஏக்கத்தை தந்தது. தயவுசெய்து முகவரியை தருக! பலவருடங்கட்கு முன் பொறியியலாளர் திருச்சி பட்டாபிராமன் என ஒருவரும் இதேபோல் ஏராளமானசேகரிப்புகளை செய்து வந்தார்.அவர்தொடர்புகூட அறுந்துபோய்விட்டது.ஒரேதுறையில் உள்ள நாம் இணைந்தால் அது எவ்வளவோ சாதனைகளை நிகழ்த்த, வாய்ப்புதருமல்லவா!

**இரா.கனகரத்தினம், உ.த.ஆ.காப்பகம்,**

**128-8,** Chetty gardens, Mulgampola, Kandy, Srilanka (Intl.Tamil Archives, PB.1328 , 5001 Bergen, Norway)

(Tamil Archives/Trichy:T.M.Saravanan,46 ,C-2, Asad nagar, Karunanidhinagar,Trichy 620021, India )

---

**அன்பின் ஆசிரியர் அறிவது,**

எனது புதியநூலின் தலைப்புக்கட்டுரையான தமிழ்க்கவியரசு கண்ணதாசனை சர்வதேசதமிழரில் பிரசுரித்தமைக்கு நன்றி! மிக்கமகிழ்ச்சி! ஆனி 97 அவரது 70வது பிறப்புபூர்த்தி ஆகும். கண்ணதாசன் இலங்கைத்தமிழர் பற்றி 40 ஆண்டுகட்கு முன் எழுதியகவிதைகளையும்,எம்.ஜி.ஆரின் நாடோடி படத்துக்காக,–நாடு!அதை நாடு!– என எழுதிய பாடலையும் இப்போது படிக்கும்போதும் தித்திக்கின்ற உணர்வு தமிழர்க்கு ஏற்படும்,என நம்புகிறேன்!

**டாக்டர் சச்சி சிறிகாந்தா**

**யப்பான்**

---

**அன்புடையீர்,**

தமிழ்நாடு இளைஞர் பேரவை சார்பில் தாயகம் இதழ்–ஈழத்தமிழர் சிறப்பிதழாக மலர்ந்துள்ளது. கடந்த 24.05.97 ல் புதுச்சேரியில் நடைபெற்ற ஈழத்தமிழர் பாதுகாப்பு மாநாட்டில் பாட்டாளிமக்கள்கட்சி நிறுவனர் டாக்டர்.ச.இராமதாஸ் அவர்கள் இதழைவெளியிட முதல்பிரதியை, மாநாட்டுவரவேற்புகுழுத்தலைவர் ந.மு.தமிழ்மணி பெற்றுக்கொண்டார். தாயகம் பற்றி சர்வதேசதமிழரில் கருத்து எழுதிட,அறிமுகப்படுத்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

**கோ.சுகுமாரன்** **ஆசிரியர்குழு, தமிழ்நாடு, இளைஞர்பேரவை, 39, முத்துமாரியம்மன் தெரு, புதுச்சேரி.605001, இந்தியா**

---

குறிப்பு:மே–97,இதழில் பல்வைத்தியர் பேட்டியில், 6ம்வசனத்தில் பாசையூரை,குருநகர் என திருத்திவாசிக்கவும்.–ஆர்.

கௌரவ சர்வதேச இணைப்பாளர்கள் / நல்லெண்ணத்தூதுவர்கள்:
நோர்வே:ஒஸ்லோ:தி.திலீபன்.22.166733;கு.பாலதாஸ் 22.206327பேர்கன்:என்.ஜெயதரன்,ஐ.றோயலா துரொண்கைம்:த.தியாகலிங்கம் ஸ்ரவங்கர்:அ.பாஸ்கரன்:முபாரக் அலி கிறிஸ்ரியன்சான்ட்:ம.பஸ்ரியன்ஏகசுண்ட்:பொன்.சிவா;துறம்சோ:கே.சிவராஜா; வார்டோ: தகனெறியப்பன்;போர்லவோக்:இரா.விஜய்;ஐ.சி.ரவீந்திரன் போட்ஸ்பியுட்:க.சுரேஷ்கரன் பிறத்வோக்: குமார் கல்வோக்:கனகசிங்கம் .

சர்வதேசதமிழர்.1997தொ.4இ.5

## ஆசிரியர் கருத்து:
## தமிழர்களும் சிதம்பரமும் !

இந்தியாவில் இன்று பிரதான கதாநாயகன் நிதி அமைச்சர் ப.சிதம்பரம் ஆவார்.பொருளாதாரம்,அரசியலில் மட்டுமன்றி மக்களின் நன்னம்பிக்கையையும்,சர்வதேசதலைவர்களது நல் மதிப்பையும்,உலகத்தமிழர்களின் அன்பையும்,அறிஞர்களின் மரியாதைக்குமுரியவராக அவர் விளங்குவது தமிழன்னையர் அனைவர்க்கும்,தாய்த்தமிழகத்துக்கும் கிடைத்த பெருமை!
இந்தியமக்கள் அன்பைப்பெற்ற காமராஜர் தலைமையில் வழி வந்த தமிழ்மாநில காங்கிரஸ் தலைவர் மூப்பனார் அனுபவத்தின்,எளிமைவாழ்வின்,மக்கள் ஆதரவின்உதாரணம்! இவர்கள் இருவருமே இந்தியாவுக்கும்,தமிழகத்துக்கும் வாழ்வு அளிக்க வந்தவர்கள்!
தமிழகத்தின் முதல்வராக மூப்பனாரும்,இந்தியாவின் பிரதமராக,ப. சிதம்பரமும் வரும்காலம் அதிக துாரத்தில் இல்லை.
அதற்காக மக்களாகவே குரல் கொடுக்க முன்வருவர்.
ஈழத்தமிழர் அவலத்தில் குரல் கொடுக்கவேண்டியவர்கள் தற்போது சிதம்பரமும்,மூப்பனாருமே என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.சிதம்பரம் அவர்களின் சொல்லுக்கு,இந்தியப் பிரதமரிடம் நிறையவே செல்வாக்கு உண்டு.உண்மைநிலையை அவருக்கு எடுத்துக்கூறி, ஈழத்தமிழர் அழிவையும்,தமிழகமீனவர் அவலத்தையும்,நீக்கி சிங்களப்படையின் கொடுரத்தையும்,அடக்க இந்திராவின் அதிரடி பாணியில் ஏதாவது செய்தே ஆகவேண்டும்.இந்திய அரசுடன்,நட்புறவாக விடுதலைப்புலிகளும் தம்விருப்பை,வெளிப்படுத்தியுள்ளனர்.
சீனா,பாகிஸ்தானுக்கே விசுவாசமானசிங்களஅரசு, இந்தியஅரசுக்கோ,மக்களுக்கோ,ஒருபோதும் நன்றிபாராட்டாது.மாறாக தமிழர்கள்,விசுவாசமாகஇருப்பர் வெளிநாட்டமைச்சர் சிங்கள லக்ஸ்மன்-கதரகமவை,தாடகை சந்திரிகாவின் மாயமான் புன்சிரிப்பை கண்டு மயங்கிவிடாது, பகவத்கீதையை நினைவில் கொண்டுதீமையைஅழியுங்கள்!

## சிந்தனைத்தடாகம் (Think Tank)
### நேற்று.இன்று.நாளை:அமைதிஉலகு!
### Før: Nå: Framtid: :Om harmonisk Verden

நோர்வே அபிவிருத்திநிதி அமைச்சரின் கடமைகளுடன்,அவசரஉதவி,சனநாயகமயமாக்கலுக்கான உதவி,விசேடவர்த்தகஒப்பந்தம்,அகதிஉதவிகள், என்பனவும் உள்ளடக்கப்படவேண்டும்! என்பது சிபார்சுகமிசனின் கருத்தாகும்.வடக்கு–தெற்கு பிரச்சனையில் சமரசபேச்சுகளில் அபிவிருத்திஅமைச்சர் முக்கியபங்கு வகிக்கவேண்டும், எனவும் கமிசன் சிபார்சுசெய்தது.
வெளிநாட்டமைச்சின் அநுசரணையுடன் அபிவிருத்திநிதி அமைச்சு இக்கடமைகளை–தென்கொள்கையை நிறைவேற்றல் மிகப்பொருத்தம் என கமிசன் கருதுகிறது
உலகசமுதாயத்தில் மாற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டு வருவதால், புதியகொள்கைகள்,புதியகருத்துகள்,தேவையாகவே உள்ளன.
சோவியத்யூனியன் உடைவு,கம்யூனிச இரும்புக்கரங்களின் முறிவு,பேர்லின் சுவரின் வெடிப்பு என்பன முழு உலகுமே பயந்த குளிர்யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்தது.
தற்போது பணக்கார 7 நாடுகளின் கூட்டத்தில் தானும் ஒரு செல்லப்பிள்ளை என நினைத்து, பபூன் போல வேண்டாதவிருந்தாளியாக போறிஸ் யெல்சின் கலந்துகொள்வதுடன்,யப்பான் ஐரோப்பாவை –உங்கள் பக்கம் வைத்த அணுராக்கட்டை அப்புறப்படுத்தியாச்சு!பயம்வேண்டாம்!–என பூச்சாண்டி தான் காட்டுகிறார்,யெல்சின்! பாவம்!தன்னாட்டு படைகட்கு ,ஆசிரியர்,தொழிலாளர்கட்கு,பென்சனியர்கட்கு சம்பளம் பலமாதம் வழங்கமுடியாத யெல்சினின் வரட்டுக்கெளரவம் நம்நாட்டு அரசியல்வாதிகளிடமும் இருப்பதைக்காணலாம்.
பணக்கார 7நாடுகளும்(ஜி–7)(யு.எஸ், கனடா,யப்பான்,பிரான்ஸ்,ஜேர்மனி,இங்கிலாந்த்,இத்தாலி)(ரஷ்யாவும் அதற்குள் அடாவடித்தனமாக புகுந்ததால் ஜி.8 என,1997இலிருந்து,அழைக்கிறார்கள். (ரஷ்யாவுக்கு துணைஅங்கத்தவமே) இந்த 8நாடுகளதும் சனத்தொகை,677 மிலியன் மக்களாவர்)டென்வரில்,கூட்டம்போட,வறிய7 நாடுகள்(பி–7)பிஜி கைத்தி,பங்ளாதேஷ்,இந்தியா,மொறிரானியா,செனகல்,சியராலியோன் போன்ற நாடுகளின்(இவற்றின்,மொத்தசனத்தொகை1.1பிலியன்)பிரதிநிதிகள் ஒன்றுகூடி பிறசல்ஸில் கூட்டம்போட்டார்கள்.
அங்கு வறியநாட்டு குழந்தைகளின் அடிமைவேலை,சூழல்பாதிப்பு,காலநிலைமாற்றத்தால் பாதிப்பு,சனநாயகமயமாக்கல்,மனிதஉரிமைபாதிப்பு,பொருட்கள்,சேவைகள்சரியானபங்கீடு,பெண் சமத்துவம்,என்பனவிவாதிக்கப்பட்டன இது வரவேற்கத்தக்கவிடயம்.
கிழக்கு,தென்கிழக்குஆசிய,லத்தின் அமெரிக்க,நாடுகளின் மக்கள்பலர் வறுமைக்கோட்டை தாண்டி உயர்வாழ்வு பெற,ஆபிரிக்க,தென்ஆசியநாடுகள் பல வறுமை,கஷ்டத்தில் உழலுவதைக் காணலாம்.பழைய சோவியத்நாடுகளிலும் வறியநாடுகளின் கஷ்டத்தை தற்போது காணக்கூடியதாகஉள்ளது.
அந்தநாட்டுமக்கள் வாழ்வை அடிக்கடி தொலைக்காட்சிகள் எடுத்துக்காட்டுவது உண்மைநிலையை நேரடியாகவே படம்பிடித்துக்காட்டுகிறது.
உலகிலும்,கண்டங்களிலும்,நாடுகளிலும்,நகரங்களிலும்,கிராமங்களிலும் கூட பணக்காரர்–ஏழை இடைவெளி அதிகரித்துவருவதை நாம் காணலாம்.
குளிர்யுத்தத்தின்பின் சமாதானம் உலகில் தோன்றும்! என்பது பிழைத்துப் போயிற்று.சில,இடங்களில்,ஓரளவு அமைதிதிரும்பினும்,புதிய யுத்தங்கள் முரண்பாடுகள் புதிதுபுதிதாக முளைத்துக்கொண்டுதான் உள்ளன.அப்பாவி மக்களே எங்கும், எதிலும்,பாதிக்கப்படுபவர்களாக உள்ளனர்.
முன்புபோலன்றி,பலமிலியன் அகதிகள் –குறிப்பாக பெண்கள்,குழந்தைகள் உலகில் பெருகக் காரணமென்ன?
பணக்கார,வலியநாடுகள் அடாவடித்தனமான,நீதியற்ற சட்டங்களால் தம்நலனைப்பாதுகாப்பதும்,எழுதப்பட்டுள்ள சட்டங்களை மதிக்காமலும்,எழுதப்படாதசட்டங்களை தமக்காக,உருவாக்கி,இரகசியமாக கைக்கொள்வதும், ஒருமனிதக்குழு, மற்றகுழுக்களை தாழ்வாக எண்ணி அவர்களது அடிப்படை உரிமைகளை காலில்போட்டு நசுக்குவதும்,ஆயுதமூலம் தம் அரசியல் பலத்தை நிலைநிறுத்தமுயல்வதும்,தேர்தல் என்றால் அதை விரும்பாத–ஒருவிதஅலர்ஜியும்–தேர்தலை வைத்தாலும்,அதில் ஏதாவது சுத்து மாத்துபண்ணி தாம் தான்,வென்றதாக மக்களையும்,உலகத்தையும் நம்ப வைக்க பெரும்பாடு படுபவர்களை என்ன செய்யலாம்? என்பதே தற்போதுள்ள கேள்வி!
அரசகதிரையில் குந்துபவர்கள்,சிறுபிள்ளைகள் போல்,எழும்பமாட்டேன்! என அடம்பிடிப்பதும்,குந்தவிரும்புபவர்களும் நாளடைவில் சர்வாதிகார போக்கும்,தமக்கு எல்லாம் தெரியும்! மக்கள் மூடர்கள்!என்ற அகம்பாவமும் கொண்டவர்களாக மாறுவதை நாம் சதாம்குசெய்ன்,பிடல்காஸ்ட்ரோ,மொபுட்டு போன்றவர்களிடம் கண்டோம்! சனநாயகத்தைஉலகுபெறுவதெப்போ?

பிரிட்டன்:டாக்டர்.செ.ஆனந்தவரதன்181.4270839;ந.பாலமுரளி181.4729336;திருமதி.த.மனோகரன்181.4713060;மு.ஆறுமுகம்
செ.நாகேந்திரன் 181.5532190கனடா:மா.மகிந்தன்:இ.வளர்மதி: நியுசிலாந்த்:தி.திருநந்தகுமார்.க.பாஸ்கரன்,பின்லாந்த்: இ.சிவலிங்கம்
இந்தியா: சென்னை:பேராசிரியர்.வ.மாசிலாமணி/அண்ணா பல்கலைக்கழகம்/44.2351723161;பேராசிரியர்.ஜ.இராமச்சந்திரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**அன்பின் ஐயா,**

வணக்கம்!நலம்,நலமே விளைக! தங்கள்இதழின் அச்சும்,வடிவமைப்பும் நன்றாகஉள்ளன.சர்வதேசதமிழர் எனும் பெயரைப்போலவே அனைத்துநாட்டுதமிழர்களின் கொள்கைமுரசாக,பண்பாட்டுபடைக்கலனாக விளங்க எம்வாழ்த்துக்கள்!

**மா.தமிழ்ப்பரிதி** **-சின்னசேலம்,தமிழ்நாடு**

---

**உயர்திரு ஆசிரியருக்கு,**

சர்வதேசதமிழர் இதழ்களை பள்ளி,மன்றம்,நண்பர்கட்கு அறிமுகம் செய்தேன். என்கவிதைகள் வெளிவந்தமைக்கு மனப்பூர்வமான நன்றிகலந்த வணக்கம்!கதை,வசனம்,பாடல் இசையமைப்பு,இனியகுரலில் பாடும்திறன்,திரைப்படதிறன் எனக்குண்டு,என்பதை தாழ்மையுடன் தெரிவிக்கவிரும்புகிறேன்.என்சேவை தேவையுள்ளோர் தொடர்புகொள்ளலாம். சுமார் 500இசைப்பாடல்களை பக்தி,தத்துவம்,காதல்,என 3தலைப்புகளிலும்,மேலும் 5000 பாடல்களும் எழுதியுள்ளேன். எனக்கு அறம்பாடும்ஆற்றலுமுண்டு.அதாவது,ஒருநபர்மீது,குறைந்தது,108,கவிதைகள்எழுதி,அந்தநபரை,அழிப்பதுதான் அறம்பாடுதல் ஆகும். **-கவிஞர் கா.ம.இராசமாணிக்கம்,3,முருகன்நகர்,சின்னதிருப்பதி,சேலம்.8,இந்தியா**

(அப்பாவித்தமிழர்க்கு பேரழிவைதரும் சந்திரிகா மீது அறம்பாடமுடியுமா?என நண்பர் ஒருவர் விசாரிக்கிறார் ஆ-ர்)

---

**ஐயா,**

தமிழர்களை முன்னேற்றம்,ஐக்கியம் கருதி ஒன்றிணைக்கும் நோர்வே,தமிழ்ச்சஞ்சிகையான,சர்வதேசதமிழர் கண்டேன். படித்துப்பார்த்தேன்.நன்றாக இருந்தது.ஆக்கங்களும் அனுப்பி ஊக்கம்தரவிரும்புகிறேன்! இன்றமி ழென்றுணை!

அன்னை பூ பதித்தாயாரின் ஐந்தாவ தாண்டுக்கான
பொன்விழா-பேச்சுப்போட்டிப் புலமையோர் படங்களோடும்,
நன்னயக் கனகரத்ன நல்லா வணக்கண்காட்சி
புன்னகை ஸ்ராலின்,பிரசாந்த் போன்றோரையுங் கண்டேனே!

**இதழை,ஆவலுடனெதிர்பார்க்கும், தாமரைத்தீவான்,சோ.இராசேந்திரம்,லிங்கநகர்,திருகோணமலை**

---

**உயர்திரு ஆசிரியருக்கு,பேரன்புடையீர்,வணக்கம்.**

01.06.97 அன்று உலகதமிழ்பண்பாட்டு இயக்க இந்திய ஒன்றியம்,சென்னைக்கிளை தொடக்கவிழாவை பேராசிரியர் சாலை இளந்திரையன் தலைமையில், தமிழ்மொழிபண்பாட்டுத்துறை அமைச்சர் தமிழ்க்குடிமகனார் முன்னிலையில் நடத்தியது. 25.06.97ல் மலேசியாவில் உலகதமிழ்மறை ஓதுதல்விழாவில், பாவலர் முல்லைவாணன் எழுதிய திருக்குறள் தெளிபொருள் பொழிப்புரை,கருத்துரை நூல் தமிழறிஞர் எஸ்.கே.உதையதுல்லா தலைமையில்,பொதுப்பணித்துறை அமைச்சர்.ச.சாமிவேலு அவர்கள்,வெளியிட்டனர்.இந்நிகழ்வுகளை சர்வதேசதமிழர் அறியஉதவ,ஆதரவைநாடும்,

**பாவலர் முல்லைவாணன் ,தலைவர்,இந்தியஒன்றியம்,உ.த.ப.இ.,20,கிருட்ணப்பா தெரு,சென்னை.5**
**தொலைபேசி:8551290 தொலைநகல்:00.91.44.8556191**

---

## சர்வதேசதமிழர் நூல்,இதழ்அறிமுகம்:

**1.விடியாதஇரவுகள்-சிறுகதைதொகுப்பு-கோவிலூர் செல்வராசன்,ஒஸ்லோ-மித்ரா பதிப்பகம்,சென்னை**

எளியநடையில்,விடயத்துக்கு நேரடியாகவரும் பல சிறுகதைகளை கொண்ட தொகுப்பு!தற்காலபிரச்சனைகளை,தமிழர் வாழிடங்களை மையப்படுத்தி எழுதப்பட்டவை.புலம்பெயர்ந்தோர் இலக்கியம்,21ம்நூற்றாண்டின் தமிழிலக்கியவளத்துக்கு புதியசுருதியும்,பரிமாணமும்சேர்க்கும்,எனும்நியாயமான,(பதிப்புரை-பொன்.அநுரா)எதிர்பார்ப்பு ஏற்றுக்கொள்ளப்படகூடியது. வெளியீட்டு,விமர்சனவிழா 010697ல் ஒஸ்லோதொய்யன்தேவாலயத்தில் டாக்டர்.சண்முகரட்ணம்,சி.சிவதாஸ்,அன்ரன்டேவிட் ஆகியோர் உரையுடன்,விஜயேந்திரன் தலைமையில்,நடைபெற்றது. கருத்துபரிமாறலில் என்.எஸ்.பிரபு,தி.திலீபன்,வ.ஐ.ச. ஜெயபாலன்,நாகரட்ணம்,ரவிக்குமார்,பிரேம்ராஜ்,அல்பிரட்,சித்திவினாயகநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர். நூலுக்கு முன்னுரை:இந்திரா பார்த்தசாரதி Koviloor Selvarajan,Finnmark gt 44,0563 oslo ,Norway Tel.00.47.22.192582

**2.கவிமலர்கள்-கவிதைதொகுப்பு-தி.திலீபன்,ஒஸ்லோ-மணிமேகலைப்பிரசுரம்,சென்னை-17**

கிறுக்குவழியில் போகும்உலகை,கிண்டித்திருத்தும் கவிஞன்வாழி!என அணிந்துரையில் என்.எஸ்.பிரபுவும்,முன்னுரையை,சிறப்பாக,கவிஞர்.மேத்தா,இ.கிருபாமூர்த்தி,அல்பிரட்ஆகியோரும் எழுதியுள்ளனர்.ஆகஸ்டில் ஒஸ்லோ தமிழ்சங்கத்தால் வெளிவிடப்படவுள்ளது.T.Thileepan,Ammerudhellinga 72,0959 oslo Tel.00.47.22.166733

**3.உணர்வுக்கோலம்-கவிதைதொகுப்பு-யாழ்.க.கணேசலிங்கம்,சென்னை-வெளியீடு:யோகேஸ்வரி.க.**

குப்பிழான்,சித்தாந்தரத்தினம்,பொறியியலாளர் க.கணேசலிங்கம் 1974ல் எண்ணக்கோலம் கவிதைநூல் வெளியிட்டபின், சென்னையில்மீண்டும் 1997ல் கவிதைநூல், டாக்டர் பொற்கோ சிறப்புரை,டாக்டர் வை.இரத்தினசபாபதி வாழ்த்துரையுடன் வெளியிட்டுள்ளார்.Yogeswari Ganesalingam,9/2,Beech Home ave.,Pesantnagar,Madras-600 090 ,India

**4.மரணஇரவுகள்-கவிதைதொகுப்பு-அருண்,மலேசியா-வெளியீடு:இளங்கோ இல்லம்,மலேசியா**

ஈழதமிழர்போராட்டஆதரவு கவிதைகள்!கணபதி கணேசன் முன்னுரை,இன்குலாப் அணிந்துரையுடன் வெளிவந்துளது Arun,425,Taman Sri Mahsan,72100,Bahau,Negeri Sembilan,Malaysia Tel.06-4547415 Fax.4545769

**5.தாயகம்-மாதஇதழ்-கோ.சிவகுமாரன்,இ.தே.பவணந்தி,கோவி.சிவகுமார்-தமிழ்நாடுஇளைஞர்பேரவை**

ஈழதமிழர் அவலங்களை தாங்கி பலகட்டுரைகள்,கவிதைகளுடன் தமிழ்நாடுஇளைஞர்பேரவையால் வெளியிடப்படும் மாதஇதழ்!ஈழத்தமிழர்போராட்டத்தில் புதுச்சேரி வாழ்தமிழர் பங்கு முக்கியமானதும்,முதன்மையானதும் ஆகும்,என்பதற்கு இந்நூல் சான்று.எம் இதயபூர்வமான பாராட்டுக்கள்!வாழ்க தமிழ்நாடு இளைஞர் பேரவை!!வளர்க தமிழக நட்பு!!

**6.புதியகாரை ஒளி-காலாண்டிதழ்-ஆசிரியர்:ஐ.தி.சம்பந்தன்-சுடர்ஒளி பிரசுரசங்கம்,லண்டன்**

லண்டனிலிருந்து வரும் கலை,இலக்கிய,பொருளாதார காலாண்டிதழ்! Flat-1,198,Neville rd,London E79QN, U.K.

திரைக்கலைஞர்.பிரசாந்த்.சேலம்:இராசமாணிக்கம்திருச்சி:ஜான்ராஜ்தேவர்: டாக்டர் சாந்தி மதுரை: இரா. இரவி:சு.இலக்குமணசுவாமி புதுச்சேரி:ச.வேல்முருகன் கல்கத்தா: பி.சத்யநாராயணன்: டெல்லி:கந்தரேசன்.ரவி ராமானுசம்.கதிர்.சம்பத்குமார் கேரளா: ச.வெள்ளிங்கிரி: டாக்டர்.லோகாம்பாள் சுந்தரம்.கைதராபாத்: என்.ஆர்.இலட்சுமணன்: பெங்களூர்:இரா.ப.முரளி.பாவலர்.ந.தமிழ்மறவன்

www.tamilarangam.net



## நோர்வே தொலைக்காட்சி அறிவிப்பாளர் றூனே ராஜேந்திரம் பேட்டி! -என்.எஸ்.பிரபு

**1960ம் ஆண்டு யாழ்ப்பாணம் குருநகரிலிருந்து அன்ரனி வின்சஸ்லோஸ் ராஜேந்திரம் எனும் தமிழர்,எட்வின் எனும் நெருங்கியநண்பருடன் பல உறவினர்,நண்பர்கள் பிரியாவிடைகூற,யாழ்.பொதுநூலகம் முன்பாக,மோட்டார் சைக்கிளில் தமது ஐரோப்பா நோக்கிய பயணத்தை ஆரம்பித்தார்.தான் வாழும் பிரதேச மீன்பிடிமக்கள் தம்தொழிலில் நவீனமுறைகளைக் கையாளவேண்டும்.அவர்கள் முன்னேறவேண்டும்.அதற்கு தம்பயணம் உதவவேண்டும்,என இவருக்கு தணியாதஆசை! பிறருக்கு உதவிசெய்ய முன்னிற்பார்.விருந்தோம்பல் பண்பில் மகிழ்வார்.ஆனால் பெயரை,புகழை விரும்பாதவர். தரை வழியே பல மத்தியதரைக்கடல் நாடுகளை கடந்து,சிறையுமிருந்து,கஷ்டப்பட்டு,இங்கிலாந்து வந்தடைந்த இவர்,பின் நோர்வே வந்தவர்,ஸ்தாவங்கரில் சிக்குருண் எனும் நோர்வேஜியபெண்ணை சந்தித்து மணந்தார்.ரண்வை,சிவ் எனும் 2 புதல்விகளையும்,றூனே எனும் புதல்வனையும் பெற்றார்.மூத்தமகள் சமூகவியல் பயின்று ஐ.நா.திட்டத்தில் பொஸ்னியாவில் பணிபுரிகிறார்.மனோதத்துவம்,மீடியா,தொலைக்காட்சிதுறைகல்வி பயின்ற,இளையமகள் சிவ்,தொலைக்காட்சி-2 ல் அறிவிப்பாளராக பணிபுரிய,றூனே சமூகவியல் பயின்று,மிலிரறியில் நாட்டோ புலனாய்வுபயிற்சி,மீடியா,தொலைக்காட்சி துறையில் படித்து நோர்வே தொலைக்காட்சியில் அறிவிப்பாளராக பணிபுரிகிறார்.**

**தந்தையார் -குட்டிஅங்கிள்- என நோர்வே தமிழர்களால் இன்றும் பேசப்படுபவர்.பாரியார் தமிழிலும் புலமை பெற்றவர். பேர்கனில் குடிவரவுதிணைக்கள அதிகாரியாக பணிபுரியும் இவர்,1990ல் கணவரை இழந்தபின் தாயாருடன் வாழ்கிறார். றூனே,நீனா,எனும் அழகியநோர்வேஜியபெண்ணுடன் 1988இலிருந்து ஒன்றாகவாழ்கிறார்.விரைவில்மணம்செய்யவுள்ளார். யாழ்.காரைநகரில்,நோராட்டின் சீநோர் திட்டம்,பேர்கனில் தமிழ் பாடசாலை,உருவாக -குட்டிஅங்கிள்-காரணமாக இருந்தவர்!அத்துடன் பலதமிழர் நோர்வே வந்து முன்னேற உதவியவர்!சமூகஈடுபாடு,உதவும்பண்பு,விருந்தோம்பல்,மகிழ்ச்சியான சுபாவம் இவற்றால் பலரை கவர்ந்தவர்! இவரது புதல்வர் றூனே ராஜேந்திரத்தை,சர்வதேசதமிழர் ஆசிரியரும், சிறப்பாசிரியர் திலீபனும் ஒஸ்லோவில்,அவரது இல்லத்தில் சந்தித்து,தேனீரை சுவைத்தபடியே கண்ட பேட்டி இதோ:**

கேள்வி:குட்டி.அங்கிள்– என தமிழர்களால் வியந்து பேசப்படும் உங்கள் தந்தையார் பற்றி சற்று கூறுங்களேன்?

பதில்:அவர் அனைவரையும் உபசரிக்கும் பண்புள்ளவர்.எவருக்கும் உதவிசெய்ய தயங்குவதில்லை.தமது மக்களுக்காக நோராட்–கண்ணாடிஇழைபடகுத்திட்டம் காரைநகரில் அமைய.ஆணே பியுடவ் போன்ற(இடதுசாரி தலைவர்) வர்களுடன் பாடுபட்டு வெற்றிகண்டார்.பேர்கனில் பிள்ளைகள்,தமிழ்படிக்க தமிழ்பாடசாலையை ஆரம்பித்துஉழைத்தார். திறந்தமனம் உள்ளவர்.இன்று நாம் உதவினால் தான்,நமக்கும் நாளை தேவையானபோது உதவிகிட்டும்,என்பார். எதையும் பெரிதாக திட்டமிடாது,ஜாலியாகவே செய்வார்.அவுஸ்ரேலியா,நெதர்லாந்த் என பலநாடுகட்கும்,பயணம்செய்தார். அவரது உற்றார்,உறவினர் பலரை நோர்வேயில் கல்வி,தொழில்துறையில் முன்னேறஉதவினார்.அத்துடன் தன்னை ஒரு சமூகஈடுபாடுள்ளவராக ஈடுபடுத்திக்கொண்டார்.1967ல் பாலர்தமிழ்பாடசாலையை தொடங்கி,தமிழாசிரியராகவும் பணிபுரிந்தார்.நோர்வே,தமிழ்க்கலாசாரத்தை படிக்கஉதவினார்.இருகலாசாரப்பின்னணி ஒருவிதபலத்தையே எனக்குத்தருகிறது.

கே.உங்களைப் பற்றி சற்று கூறுங்களேன்?

ப: 1970ல் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் தான் நான் பிறந்தேன்,என்பது பல தமிழர்க்கு ஆச்சரியமாயிருக்கலாம்.இளமைக் காலத்தில் யாழ்ப்பாணத்தின் நீண்டகடற்கரைகளில் ஓடித்திரிந்து விளையாடியது,அணில் பிடித்துமகிழ்ந்தது,இன்னமும் மறக்கமுடியாத அனுபவம்! மீன்களின் சுவையும், கறிக்கடை,சந்தையின் பரபரப்பும் பசுமையாக நினைவிலுள்ளது. 2வருடம் இலங்கையிலும்,5வருடம் ஸ்ராவங்கரிலும்,18வருடம் பேர்கனிலும்,தற்போது ஒஸ்லோவிலும் என வாழ்வுபோகிறது. எனது மூத்தசகோதரி நன்றாகதமிழ் பேசுவார்.சிவ் தமிழை விளங்கிக்கொள்வார்.எனக்கு தந்தையார் தமிழை கற்பித்தும் இங்கு முற்றாக நோர்வேஜியமொழியின் ஆதிக்கத்தால் தமிழ் நன்றாகவரவில்லை.நான் தமிழில்,குறைவுதான் 1990–91ல் நோர்வே மிலிரறியில்,நாட்டோ புலனாய்வில் பயிற்சிபெற்றேன்.91–92ல் சமூகவியல் பயின்று,92–94ல் மீடியாகல்வி பயின்று,94–95ல் தொலைக்காட்சி தயாரிப்பு பயின்றேன்.1996ல் தொலைக்காட்சியில் அறிவிப்பாளராக பதவிகிட்டியது. என் விண்ணப்பம் தொலைக்காட்சியில் பணிபுரியும்,ஆணேபியுடவ்வின்,மனைவியார் ரன்கில்ட்டின் கண்களில் பட்டதும் தெரிவுக்கு அவர்பொறுப்பானவராக இருந்ததால்,–ராயேந்திரம்...அறிமுகமானபெயராக இருக்கிறதே!–என எண்ணி உடனே மொபில் ரெலிபோனில் குரல்பரீட்சைக்கு வரும்படி அழைப்பு விடுத்தார்.சிவ் உன் சகோதரியா?என கேட்கவும் அவர் தயங்கவில்லை!எல்லாம் ஒரு வித ஆவல் தான்!இனிமேல் நான் முன்னேற்றம்,தயாரிப்பு,நெறிப்படுத்தலில் அதிகம் ஈடுபடவுள்ளேன்.அறிவிப்பாளராக சிலசமயமே பணிபுரியவுள்ளேன்.டாகுமென்டறி படங்கள் தயாரிப்பிலும் ஈடுபடவுள்ளேன்.

கே.உங்கள் சகோதரி தொலைக்காட்சி 2 ன் அறிவிப்பாளர் சிவ் பற்றி கூறுங்கள்?

ப:1992ல் டி.வி.2ல் தற்செயலாகத்தான் அவருக்கும் பணியாற்ற சந்தர்ப்பம்கிடைத்தது. நாடிப்போனது இல்லை.அவரது நண்பி ஒருத்தி,குரல்பரீட்சைக்கு சிவ்வை கூப்பிடும்படி நிர்வாகத்திடம் சிபார்சு செய்தார்.போனார்!வென்றார்!பின்பு தான் தொலைகாட்சி பற்றிய படிப்பு படித்தார்.செபஸ்தியன் அன்ரனி(6),வேரா(4)என இருபிள்ளைகள்! சுட்டிப்பிள்ளைகள்!!

கே.இலங்கைப்பிரச்சனை பற்றி...?

ப: 1980களில் நாம் அங்குநின்றபோதுதான் யாழ்.நூலகம் எரிக்கப்பட்ட அதிர்ச்சி தரும் சம்பவம் நடந்தது.அது என் மனதை பாதித்தவிடயம்.அது பெரும் அவலம்!கோழைத்தனமான விடயம்!கலாசாரத்தை சீரழிக்கும் முயற்சி!நூலகம் புனிதமான அறிவுக்களஞ்சியம் என்பதை உணராதவர்கள் செய்த காட்டுமிராண்டி வேலையே இது.உலகிலுள்ள பல சிறுபான்மைமக்கள்பிரச்சனையை சர்வதேசசமூகம் கணக்கில் எடுக்கவில்லை.என்பதற்கு தமிழர்பிரச்சனை உதாரணம்!

கே.இங்குள்ள இளம்தமிழ் சந்ததிக்கு உங்கள் அறிவுரை...?

ப:உங்களில் நீங்கள்,அதிகநம்பிக்கை கொள்ளுங்கள்!உங்கள் வயதொத்தவர்களுடன் சேர்ந்துபழகுங்கள்!ஒதுங்காதீர்கள்! நம்மால்முடியும்!என முயற்சியுங்கள்!நோர்வேஜியர்களுடன் நல்லெண்ணம் வளர்ப்பது இருவழிப்பாதை என எண்ணுக! மிகத்திறமைவாய்ந்த தகுதியானவர்க்கே இங்கு பதவிகள் வழங்கப்படுகிறது.எனவே கடினஉழைப்பு முக்கியம்!தமிழர் தம் அடையாளத்தை காப்பதும், நோர்வேஜியமொழி புலமை,நோர்வேமக்களுடன் நட்புறவு என்பனவும்கூட முக்கியம்!

கே.பிரபலவிளையாட்டுவீரர், யோகன் ஒலாவ்கொஸ் எரித்திரியருக்கு ஆதரவுதந்ததுபோல நீங்கள் தமிழர்பிரச்சனைக்கு..!

ப:அவர் போல் நான் அதிகம் பிரபலமானவனல்ல.எனினும் என்னாலான பணிசெய்யலாம்.

கே.தமிழர் நோர்வேயில் எந்த கட்சிக்கு ஆதரவு தரலாம்? உங்கள் தெரிவு....?

ப.சோசலிச இடதுசாரிதான் உள்ள கட்சிகளில் எனக்கு பிடித்தது,நல்ல கொள்கைகள்!காளிகாகன் கட்சி உதவாக்கரை!

**இவர் துணைவியார் சமையலறையில் மும்முரமாக சமையலில் கருமமே கண்ணாயிருக்க நாம் நன்றிகூறி விடைபெற்றோம்!**

டென்மார்க்:ச.யோகேந்திரம்;வ.க.பரமநாதன்; பிரான்ஸ்: பற்குணராசா,த.தர்மசீலன்1.43759171; இ.கிருபானந்தன், இ.கந்தசாமி
இலங்கை: கொழும்பு: வி.கங்கைவேணியன்41.684549 விதுரன்; க.சண்முகலிங்கம் பி.ஏ.எல்.எல்.பி;மா.தேவகௌரி பி.ஏ.சிறப்பு
கைதையூரான் குமரகுருபரன் பி.காம்.;சுகந்தி தில்லையம்பலம் யாழ்ப்பாணம்:பி.ஹம்சானந்தி; மட்டக்களப்பு: க.சபாரத்தினம்;

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



...மட்டக்களப்பு-அம்பாறை சென்றல்காம்பில் குடும்பப்பெண்ணான தமிழ்த்தாய் முருகேசபிள்ளை கோணேஸ்வரியை(35வயது)(4பிள்ளைகள்)மிருகத்தனமாக,4சிங்களப்பொலிசார்,கொடூரமாக சித்திர வதை செய்து,கற்பழித்ததுடன்,மருத்துவபரிசோதனையில்விடயம் வெளிவந்துவிடுமே!என எண்ணி கைக்குண்டை பெண்உறுப்பினுள் வெடிக்கச்செய்த உலகமகா,பயங்கரமிருகத்தனம் நடைபெற்றது. இதனை சனாதிபதிக்கு தமிழ் எம்பிக்கள் அறிவித்ததும் வழமைபோல்,அவர்கள் தண்டிக்கப்படுவர்! என,சிங்களசனாதிபதி கூறியுள்ளார்.உண்மையில் அவர் தன்பதவியை உடன்துறந்திருக்கவேண்டும்
இதுகுறித்து அமெரிக்கசனாதிபதியின் பாரியார் கிலாரி கிளின்ரனுக்கு அவசர எலக்ரோனிக்கடிதம் ஒன்றை சர்வதேசதமிழர் ஆசிரியர் அனுப்பியுள்ளார்.அதில் உடனடியாக ஐ.நா.தூதுவர் பில் றிச் சாட்சனை,இலங்கைஅனுப்பி,இக்காட்டுமிராண்டித்தனத்தை விசாரிக்கும்படியும் சனாதிபதியுடனும், புலிகளின் தலைவர் பிரபாகரனுடனும் அவர்நேரடியாகப்பேசி அரசியல்தீர்வுக்கு விரைவில் உதவும் படியும் கேட்டுள்ளார்.20000 சிங்களபடை தமிழர் பிரதேசமானவன்னியை முற்றுகையிட்டு,குண்டு,செல்,வீசி,உயிர்களைகொன்று,சொத்துகள்,விவசாயம்,சூழலைநாசம்செய்வதையும் உடன்நிறுத்தும்படி முன்பு சனாதிபதிக்கு,அனுப்பிய எ.கடிதத்துக்கு,கவனத்துக்கு எடுக்கப்படும்!என பதில் வந்துள்ளது. முன்பு வவுனியா தடுப்புமுகாம் கொடுமைபற்றி வெள்ளைமாளிகைக்கு தமிழில் அனுப்பியகவிதை நல்லபலனைத்தந்தது.அமெரிக்கதூதரகஅதிகாரிகளும்,ராஜங்கஅமைச்சுஅதிகாரியும் வவுனியா வருகைபுரிந்தமை இங்குகுறிப்பிடத்தக்கது.அதேபோல் பில் றிச்சாட்சனின் வருகையும் எதிர்பார்ப்போம்!

...1996ல் இலங்கையில் போதைவஸ்து பாவிப்பில் 86.8வீதம்-சிங்களவர்,6.3வீதம்-முஸ்லிம், 3.4வீதம்-தமிழர், 1.1வீதம் மலே,1வீதம் பறங்கியர் ஈடுபட்டதாக போதைபொருள்தடுப்புசங்க ஆய்வு கூறுகிறது.போதைபொருள் பாவித்த,1857பேரில்74.7வீதம்பௌத்தர்கள்,8.7வீதம்முஸ்லிம்கள்,13.1வீதம் கிறிஸ்தவர்கள்,1.4வீதம் இந்துக்கள் ஆவர்.கொழும்பில் 67.2வீதமும்,கம்பகாவில் 12.6வீதமும்,காலியில்6.5,கண்டிமாவட்டம்5.4வீதம் என பாவிப்போர் உள்ளனராம்.இது சமயசிந்தனைக்குரியவிடயமே!

....நோர்வேயின் எண்ணைஉற்பத்தி 1997 மார்ச்சில் 2.95மிலி.பரல்களாயும்,ஏப்ரலில் 3.22மிலி பரல்களாயும் இருப்பதாயும் எண்ணை இயக்குனர் கூறியுள்ளார்.

....நோர்வேயில் பணக்காரர்-ஏழைகட்கிடையிலான வருமானஇடைவெளி அதிகரித்துள்ளதாக புள்ளிவிபரமத்தியநிலையம் கூறியுள்ளது.1985ல் 10வீதமான பணக்காரர் 36வீத முதலீடுவருமானத்தையும் 1996ல் 63வீதமுதலீடுவருமானத்தையும் பெற்றனராம்.வறியோரின் தேறியவருமானம் 4.2வீதத்திலிருந்து 3.9வீதமாகவீழ்ச்சிஅடைந்ததாக மொத்தசுட்டெண் காட்டுகிறதாம்.1992ன் வரிமுறைமாற்றமே இதற்கு காரணம் என கூறப்படுகிறது.

...சுவீடிஷ்அரசன் 16வது காள்குஸ்தாவ் தனது தேசியநாள்உரையில்,இனதுவேசம்,தேசியரீதியான வேற்றுஇனங்களைப் பொறுக்காததன்மையை கண்டித்துள்ளார்.தேசியவாதம் சனநாயகத்தையும், தீவிரமான,வேற்றுஇனங்களைபொறுக்காததன்மையையும் 2முகங்களாகொண்டுள்ளதாக கூறினார்.

.....ஜேர்மனியில் குப்பைகூளங்களின் மீள்பாவிப்பை அரசு சட்டப்படுத்த எண்ணியுள்ளதாம்.அதனை மற்றநாடுகளும் பின்பற்றினால் உலகின்,இயற்கைவளங்களை கவனமாகப்பாவித்து முன்னேறலாம்.

.....கனடாவின் கியுபெக் மாநிலம் பிரஞ்சுமொழியின் சட்டஅமுலாக்கத்தை நடைமுறைப்படுத்த மொழிப்பாதுகாவலர்களை அறிமுகப்படுத்தவுள்ளதாம்.தமிழகத்திலும் இத்தகைய காவலர்களை அறிமுகம் செய்யலாமே!ஆனால் சர்வதேசமொழியான ஆங்கிலத்திலும் பெயர்ப்பலகைகள் இருப்பது,உல்லாசபிரயாணிகளை வரவேற்பதாகவும்,பெருந்தன்மையாகவும் இருக்கும்.

....சிறிதளவு,சூழல்மாசடைதலே மக்களை கொல்லபோதுமாய் உள்ளதாம்.12 ஐரோப்பியநாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வில் கரும்புகை,காபனீரொட்சைட் என்பன ஆரோக்கியத்துக்கு பெரும்பாதிப்பை ஏற்படுத்துவதாக ஏதென் பல்கலைக்கழக ஆய்வு கூறுகிறதாம்.30வருடத்துக்கு முன்பைவிட கரும்புகை(காபன்மொனொக்சைட்)குறைவெனினும்,புதியகழிவுகள்,நிலைமையை மோசமாக்கியுள்ளதாம்.மேற்குஐரோப்பாவில் பல இறப்புகள் இதனால் நிகழ்ந்துள்ளதாம்.

.....கறுப்புஉடையுடன்,மோட்டார்சைக்கிளில்சுற்றுபவர்களான,ட்றம்மன்,பண்டிடோஸ்-மோட்டார் சைக்கிள்கிளப்பின்,வதிவிடம் அண்மையில் குண்டுவைத்து தகர்க்கப்பட்டதில் ஒரு பெண் இறந்தார்.பலர் காயமடைந்துள்ளனர்.எதிரி குழுவான கெல்ஏஞ்சல்ஸ் மோதலால் ஏற்பட்ட பழிவாங்கலே காரணம் என நம்பப்படுகிறது.

....அமெரிக்கா ∴பி.61-11 எனும் புதியஅணுகுண்டை தயார்செய்துள்ளதாம்.ராடாருக்கு,புலப்படாத விமானத்தில் இதனை ஏற்றி உலகின் எப்பகுதிக்கும் அனுப்பமுடியுமாம்.அணுவாயுத தடுப்புஒப்பந்தத்தை இதுமீறுவதாகும்!எனசிலர்குறைகூற,பழையதையே புதுப்பிப்பதாக யுஎஸ் கூறுகிறதாம்.

மாத்தளை: தவ.சஜிதரன் திருகோணமலை:மதுமாரி ,செ.கனகரத்தினம் கண்டி: எஸ் .மயில்வேந்த ன்: இரா.கனகரத்தினம் அட்டன்:பாலா சங்குப்பிள்ளை:குவைத்:முகமதுகவுஸ்; வி.எம்.லிங்கன்: சுவிற்சலாந்த்:எஸ்கதிர்காமநாதன்: 41.12724336; இரா. கலாதரன்:அமெரிக்கா: செ.பாஸ்கரன்: அவுஸ்திரேலியா:பத்மா ஞானப்பிரகாசம்தென்கொரியா:ஏ.யு.எல்.ஏ.ஹில்மி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஈழ மக்கள் ஆதரவு கூட்டமைப்பு சார்பில் 24.5.97 சனியன்று மாலை 6 மணி அளவில், புதுச்சேரி கடலூர் சாலையில், பெரியார் திடலில் நடைபெற்ற, "ஈழத்தமிழர் பாதுகாப்பு மாநாட்டில்" நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

(1) தமிழீழ விடுதலைப் போரில் எண்ணற்ற தமிழர்கள் வீரச்சாவு எய்தி-யுள்ளனர். அவர்கள் அனைவருக்கும் இம்மாநாடு வீர வணக்கம் செலுத்துகிறது.

(2) இந்திய அரசு தென்னாப்பிரிக்கா, நமீபியா, பாலஸ்தீன விடுதலையை அங்கீகரித்துள்ளது. ஆனால், தமிழகத் தமிழர்களின் சொந்த சகோதரர்களான ஈழத் தமிழர்களின் போராட்டத்தை அங்கீகரிக்க மறுக்கிறது. இந்திய அரசு, தமிழீழத்தை அங்கீகரிக்க வேண்டுமென இம்மாநாடு வற்புறுத்துகிறது.

(3) உலக அளவில் நடைபெறும் பல்வேறு தேசிய இனப்போராட்டங்களை உலக நாடுகள் அங்கீகரித்து உள்ளன. உலக நாடுகள், தமிழீழத்தை அங்கீகரிக்க வேண்டுமென இம்மாநாடு வேண்டுகோள் விடுக்கிறது.

(4) பாலஸ்தீனம் தனிநாடாக அங்கீகரிக்கப்படாத நிலையிலேயே பாலஸ்தீனத்தை ஐக்கிய நாடுகள் அவையில் உறுப்பாக சேர்ந்ததுபோல் தமிழீழத்தை, ஐ. நா. அவையில் உறுப்பாக சேர்க்க வேண்டுமென இம்மாநாடு வேண்டுகோள் விடுக்கிறது.

(5) இந்திய அரசு, விடுதலைப்புலிகள் இயக்கத்தின்மீது தடை விதித்துள்ளது. இது இந்தியாவில் பேச்சுரிமை, கருத்துரிமை பறிக்கப்பட்டுள்ளதையே காட்டுகிறது. விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீதான இந்தியஅரசின் தடையை உடனடியாக நீக்க இம்மாநாடு வற்புறுத்துகிறது.

(6) இலங்கையில் சிங்கள இன வெறி அரசு ஈழத் தமிழினத்தை அழித்தொழித்து வருகிறது. இதனால், இந்தியாவை நோக்கி, தமிழகத்தை நோக்கி ஈழத் தமிழ் அகதிகள் வந்தவண்ணம் இருக்கிறார்கள். இந்திய அரசோ, தமிழக அரசோ அகதிகளுக்கு போதிய வசதி வாய்ப்புகளை ஏற்படுத்-தாமல் அகதிகளை குற்றம்பரம்பரையினர்போல் நடத்தி வருகின்றன. இந்திய அரசு, ஈழத் தமிழ் அகதிகளை வரவேற்று, அரவணைத்து அனைத்துலக சட்டப்படி உரிய பாதுகாப்பு அளித்திட வேண்டுமென இம்மாநாடு வற்புறுத்துகிறது.

(7) இந்திய அரசு, இலங்கை சிங்கள ராணுவத்திற்கு பயிற்சி கொடுத்தும், ஆயுதங்கள் வழங்கியும் மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் ஈழப் போராட்டத்தை ஒடுக்கி வருகிறது. இதனை இம்மாநாடு வன்மையாக கண்டிக்கிறது. ஈழச் சிக்கல் குறித்து ஐக்கிய முன்னணி அரசு தன் மௌனத்தைக் கலைந்து தன்னுடைய நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டுமென இம்மாநாடு வற்புறுத்துகிறது.

ரஷ்யா/மாஸ்கோ: முருகேசம்பிள்ளை ஆர்.சுகுமார் சவுதி அரேபியா / அல் கதீவ்: அ.நிக்சன் ரியாட்: பி.யோகநாதன்
ஜித்தா:எஸ்.காளிதாஸ் துபாய்: நஜீர் முகமது.எ. பாஹ்ரெயின்:அப்துல்கனி; எம்.ஜராபீக் ஓமான்:எஸ்.கண்ணன்.க.கணேசலிங்கம்
குவைட்:எம்.என்.பாலாஜி; வ.சத்தியவான்; ஜேர்மனி:க.செந்தில்:0230478452;த.புவனேந்திரன்: 0230474391; நெதர்லாந்து:எஸ்.அருள்

www.tamilarangam.net



( 8 ) தமிழக கடலோர மீனவர்கள், புதுச்சேரி காரைக்கால் பகுதி மீனவர்கள் தொடர்ந்து சிங்களப் படைத் துறையினரால் சுட்டுக் கொல்லப்படுகின்றனர். துன்புறுத்தப்படுகின்றனர். இதனால், மீனவர்களின் மீன்பிடித் தொழிலுக்கு கடுமையான பாதிப்பு ஏற்படுவதோடு, மீனவர்கள் தங்கள் உயிரையே இழக்க வேண்டியிருக்கிறது. இதனை இம்மாநாடு வன்மையாக கண்டிக்கிறது. தமிழக, புதுச்சேரி மீனவர்களைக் காப்பாற்ற இந்திய அரசு நிரந்தரமான, உறுதியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இம்மாநாடு வற்புறுத்துகிறது.

( 9 ) இலங்கையில் சிங்கள அரசு, சிங்கள இன வெறியோடும் பௌத்த மத வெறியோடும் தொடர்ந்து ஈழத் தமிழினத்தை அழித்து வருகிறது. இதனை இம்மாநாடு வன்மையாக கண்டிக்கிறது. இன அழிப்புப் போரை கைவிட உலக நாடுகள் சிங்கள அரசை வற்புறுத்த வேண்டுமென இம்மாநாடு வேண்டுகோள் விடுக்கிறது.

( 10 ) இலங்கை அரசு நடத்தி வரும் மனித உரிமை மீறல்களைக் கண்டறிந்து, உண்மை நிலையை வெளிக்கொண்டு வர ஐக்கிய நாடுகள் அவை ஓர் 'உண்மை அறியும் குழு' அமைக்க வேண்டுமென இம்மாநாடு வேண்டுகோள் விடுக்கிறது.

( 11 ) இலங்கையில் உள்ள தமிழ்ப் பகுதிக்குள் செஞ்சிலுவைச் சங்கம் சென்று சேவை செய்வதை சிங்கள அரசு தடை செய்துள்ளது. இது அனைத்துலக சட்டத்திற்கு எதிரான செயல் ஆகும். இதனை இம்மாநாடு வன்மையாக கண்டிக்கிறது. செஞ்சிலுவைச் சங்கம் தமிழ்ப் பகுதிக்குள் செயல்பட அனுமதிக்குமாறு இலங்கை அரசை இந்திய அரசு வற்புறுத்த வேண்டுமென இம்மாநாடு வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

( 12 ) இலங்கை அரசு ஈழத் தமிழர்களுக்கு வழங்கப்படும் அத்தியாவசிய உணவுப் பொருட்களை தடை செய்துள்ளது. இதனை இம்மாநாடு வன்மையாக கண்டிக்கிறது. ஈழத் தமிழர்களுக்கு தேவையான உணவுப் பொருட்கள் வழங்கிட வேண்டுமென இம்மாநாடு வற்புறுத்துகிறது.

( 13 ) தமிழக அரசியல் கட்சித் தலைவர்கள், ஈழத் தமிழர் துயர் துடைக்க இந்தியாவில் உள்ள செஞ்சிலுவைச் சங்கத்திடம் வழங்கிய லட்சக் கணக்கான ரூபாய், மருந்துப் பொருட்கள் ஈழத் தமிழர்களுக்குச் சென்றடையாமல் தில்லியிலேயே முடக்கப்பட்டுள்ளன. இதனை உடனடியாக ஈழமக்களுக்கு வழங்கிட ஆவன செய்ய இந்திய அரசை இம்மாநாடு வற்புறுத்துகிறது.

( 14 ) ஈழத் தமிழர்களுக்கு தார்மீக ஆதரவு கொடுத்து வரும் தமிழக அரசியல் கட்சியினர் மற்றும் இயக்கத்தினர் மீது தமிழக அரசு போட்டுள்ள வழக்குகளை நிபந்தனையின்றி திரும்பப் பெற இம்மாநாடு தமிழக அரசை வற்புறுத்துகிறது.

பொற்செல்வன்:கமலா:வேலுப்பிள்ளை புருணை: வி.எஸ்.சிவகுமார் யப்பான்:டாக்டர்.சச்சி ஸ்ரீகாந்தா சிங்கப்பூர்:மு.பத்மா
மலேசியா:க.மாணிக்கவாசகர்.க.கணேசன் அருண் பேராசிரியர்:இரா.க.வீரப்பன் இந்தோனேசியா: மெடான்:நாகலிங்கம்: மு.சந்திர
சேகரன்: யசோர்த்தா:திருமதிமணி தாய்லாந்து:பாங்கொக்:வே.நாகராஜு புக்கற்:மெ.வேலு:நா.சங்கரன் பர்மா-அப்துல் ரசாக்

www.tamilarangam.net



## ஈழம் நோக்கி ........வழிப்போக்கன்

சந்திரிகாஅரசு ஆட்சிக்கு வரும்போது தம்மை சமாதானப்பிரியர்களாகவும் உண்மையில் இலங்கையின் நலம் விரும்பிகளாகவும் காட்டிக்கொண்டது. தேர்தலில் காட்டிக்கொள்ளும் முகமே வெளிநாட்டின் கவனத்தை ஈர்க்கும்! என்பதை சந்திரிகா பிரான்சில் படிக்கும் போது படித்திருக்கலாம். தொடர்ந்து செய்யபோகும் அட்டகாசங்களுக்கு இது முகமூடியாக இருக்கும். சந்திரிகா சிலவேளை உண்மையிலே அமைதியை விரும்பியிருக்கலாம். ஆனால் தேரோக்களின் தேறாத புத்திகள் மந்திக்குணங்களைக் காட்டியும் இருக்கும். தாமே வளர்த்து விட்ட ஜே.வி.பி தம் ஆட்சிக்கெதிராய் திரும்பியபோது, தன்இனமென்றும் பாராமல் சுட்டுத்தள்ளி ஆற்றில் பிணங்களை மிதக்கவிட்ட சிறீமாவின்; மகள் தமிழர்மேல் இரக்கம் காட்டுவார் என்பது எதிர்பார்க்க முடியாத ஒன்று தான்!

போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம் என ஏக்காளமிட்டுக் கொண்டு இருந்தது, ஐ.தே.க.அவர்களின் முடிபு எல்லோரும் அறிந்ததொன்றே. சமாதானவிரும்பியான சந்திரிகா சமாதானத்துக்காகப் போர்! என்னும் புதிய மந்திரத்தை உச்சரிக்கத் தொடங்கியது வேடிக்கையானதே. சமாதானம் என்ற பதத்துக்கு எதிர்பதமே போர். ஆயுதங்களினாலே,போரினாலே அமைதி ஏற்பட்டதாகச் சரித்திரமே இல்லை. இனியும் வரப்போவதில்லை.இது சந்திரிகாவின் நிலையற்ற குள்ளநரிக்குணத்தைக் காட்டுகிறது. இராஜதந்திரம், பேச்சுவார்த்தை, எதிர்பாகத்தைப் புரிந்து கொள்ளும் தன்மை, தமது பிரச்சனைகளை விபரமாகத் தெளிவாக முன் வைத்தல், விட்டுக் கொடுக்கக்கூடியவற்றை விட்டுக்கொடுத்தல், முடியாதவற்றை ஏன் முடியாது? என விளங்கப்படுத்துதல், பொறுமை, சகிப்புத்தன்மை இவற்றைக் கொண்டவர்களே பேச்சுவார்த்தைக்கோ அரசியலுக்கோ பொருத்தமானவர்கள். இவை எல்லாவற்றையும் விட மனிதத்தை மதிக்கும் பண்பு! மிக மிக முக்கியமானது.

இனி போர்நிலைகளைச் சிறிது ஆராய்வோம். சுலபமாக, பெரிய இழப்புகளைச் சந்தியாது குடியேற்றங்களைச் செய்யக்கூடிய கிழக்குமாகாணத்தை விட்டு விட்டு, ஏன் சந்திரிகா யாழ்ப்பாணத்தைக் குறிவைத்தார்? எனவெண்ணிப் பார்த்தால் சில உண்மைகள் புலப்படும். தாம் ஐ.தே.க விட திறமைசாலிகள், என்பதைக் காட்டுவதுடன் போரென்றால் போர்! சமாதானம் என்றால் சமாதானம்! என்பதை நிரூபிப்பதுடன், புலிகளைப் பயமுறுத்திப் பணிவைப்பதுமே நோக்கமாகும். ஒருவனை மானபங்கப் படுத்திவிட்டு, இனிப்பேச்சு வார்த்தை நடத்துவோமா? எனக்கேட்டால் புலிகள் மட்டுமல்ல பயந்த எலிகூட இதற்கு இணங்காது. இது புலிகளை அமைதி,சமாதான விரோதிகளாய் உலகுக்குக் காட்டுவதுடன், சிங்களமக்களிடையே தன்னம்பிக்கையையும் தொடர்ந்து ஆட்சியில் இருப்பதற்கான அடிப்படை காரணியாக உறுதிப்படுத்திக் கொள்வதோடு பொருளாதரீதியாக ஏற்படும் நலிவுகளை சிங்களப்பேரினவாதிகளிடம் இருந்து மறைப்பதுமே ஆகும். கெரில்லாக்களின் அசைவுகள் ஒரு இடத்திலும், பாதுகாப்பும், பதுங்குமிடங்களும் வேறு இடங்களில் அசைவுகள் இருக்கும், என்பதை இவர்கள் அறிந்திருக்கலாம். யாழ்ப்பாணத்தைப் புலிகள் இழக்கும்போது அசைவுகள் பதுங்குமிடங்களை நோக்கி இருக்கும் என்பதை அரசு எதிர்பார்த்திருக்கலாம்.

சந்திரிகாவின் சதுரங்கத்தில் காய்நகர்வுகள் ஐ.தே.க வினரை விட மிக அவதானமானதாகவும், அறிவுரீதியாகவும் இருந்திருக்கிறது. முதலாவது காய்நகர்வு, சங்கானை சண்டிலிப்பாய் வரை இருந்தது. புலிப்பாச்சல் எனப்பெயரிட்ட எதிர்தாக்கல் புலிகளுக்கு வெற்றிகரமாக இருந்தது. இதேவேளை பலாலியில் இராணுவம் குவிக்கப்பட்டுக் கொண்டே இருந்தது.சந்திரிகா படையைச் சுலபமாக பின்னெடுத்தார். ஆமியை முன்னெடுத்துப் பின் நகர்த்துவதன் மூலம் புலிகளின் அசைவுகளைக் கண்காணிப்பதோடு, வேறுதிசையில் புலிகளின் கவனத்தைத் திருப்பி அங்கே மையப்படுத்தியும் இருந்தார். இந்த நகர்வின் போது புலிகள் தமது கிழக்குமாகாணப்படை சிலவற்றை வருவிப்பார்கள் என்பதும், புலிகள் யாழ்பாணத்தை தற்காலிகமாகக் கூட இழக்க விரும்பமாட்டார்கள் என்பதும், இதனால் கொழும்பு மற்றும் எல்லைப்புறங்களில்ஆத்திரங் கொண்ட புலிகளின் தாக்குதல் இருக்கும் என்பதும், யாழ்மக்கள் மட்டுமல்ல தமிழர்கள் அனைவருமே, புலிகள்மேல் நம்பிக்கை இழப்பார்கள்! என்பன சந்திரிகாவின் எண்ணமாக இருந்தது. இதேவேளை புலிகள் ஐ.தே.க. வையும் இந்திய இராணுவத்தையும் அடித்துக்கலைத்த இறுமாப்பில், சிறிது தம்மைக்கூடுதலாக எடைபோட்டும், எதிரியைக் குறைத்து எடைபோட்டும் இருந்தார்கள் என்பதை மறுக்கவோ, மறைக்கவோ இயலாது. ஒருபகுதியால் நகரமுயல்வது போன்று போக்குக்காட்டி பலாலி பெரிய முகாமிலிருந்தே நகர்வை மேற்கொண்டார். இந்நகர்வு கூட மிக நுட்பமாகச் செய்யப்பட்டிருக்கிறது. தெருக்களில் நிலக்கண்ணிகள் (சக்கை)

இலாபநோக்கின்றி சேவைநோக்கில் ;பலரது அரசியல்,சமூக,சமய,கருத்துக்களைத்தாங்கிவரும் நடுநிலைச்சஞ்சிகை இது.
ஜனநாயகம்,மனிதஉரிமை,சுதந்திரம்,சமாதானம்,நீதியுடன் கூடிய தமிழர் முன்னேற்றம்,ஐக்கியம் கருதுவதே நம் பணி!
தமிழார்வலர்,எழுத்தாளர்,கல்லூரி,பொதுநூலகமுகவரிகள் தந்துதவுக! தகவல்சேவையில் உங்கள் நாட்டு விபரங்கள் பகிர்க

www.tamilarangam.net



இருக்கும் என்பதால், நகர்வுகள் வீடு வளவுகளினூடாக இருந்தது. பிடிக்கப்பட்ட பகுதிகளில் நிலை கொள்ளும் ஆமி, கருவிகளின் உதவியுடன் சக்கைகளை அகற்றி வந்தன.இதேபோன்ற போக்குக்காட்டி தாக்குதல்களில் கெரில்லாக்களே சிறந்தவர்கள்! என்பதை பிரபாகரனும் பலமாக நிரூபித்துள்ளார். பரந்தன் பாரிய முகாம்தாக்குதல், கிழக்கில் சீனக்குடா, வவுணதீவு தாக்குதல்களும் இதை இனங்காட்டியுள்ளன. மேலும் யாழ்நகரில் பிடிக்கப்பட்ட இடங்களில் மதில்கள், கம்பிவேலிகள் போன்றவை அமைத்துப் புலிகளின் நகர்வுகளையும், மக்கள் தொடர்புகளையும் குறைத்துள்ளனர். யாழ்நகர் சென்றுவந்த சிலர் தந்த தகவலின்படி இராணும் மக்களை பெரிதும் வாட்ட வில்லை, போக்குவரத்து, விவசாயம் சீரமைக்கப்படுகிறது எனவும் அறியத்தந்தார்கள். இதுவும் அரசின் தந்திரங்களில் ஒன்றே! மக்களைத் தம்வசப்படுத்துவதால் புலிகளில் வெறுப்பையும், அவநம்பிக்கையையும் ஏற்படுத்தலாம், என்பதேயாகும்.கிழக்கில் தாக்குதல்கள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் வேளை ஏன் வவுனியாப்பகுதியையும், வவுனியா பாதையையும் திறக்க முற்படுகின்றனர்? வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் இப்பகுதியில் இராணுவம் நிலைகொண்டால் புலிகளின் அசைவுகள் கட்டுப்படுத்தப்படும். முக்கிய பதுங்கு தளங்கள் தம்வசமாகும், வடக்குக்கும் கிழக்குக்குமான ஆயுதப்பரிமாற்றங்கள், படைநகர்வுகள் ஸ்தம்பிதமாகும் என்பனவே முக்கிய காரணங்கள்.

மக்கள் செறிந்த சமதரைக்கான கெரில்லாயுத்தம் என்பது, கெரில்லாக்களுக்கும் பொதுமக்களுக்கும் அழிவைத்தரக்கூடியது. ஆகவே கெரில்லா யுத்தத்துக்கான சிறப்புப்பிரதேசங்கள் மலையும் மலைசார்ந்த பகுதியுமான குறிஞ்சி நிலங்கள், சதுப்பு நிலங்கள், காடும் காடுசார்ந்த இடங்களுமே ஆகும். இப்படியான நிலப்பகுதியிலேயே புலிகள் தமது பதுங்கு மையங்களை அமைத்திருப்பார்கள் என்பதை அனுபவரீதியாகவே அறிவுரீதியாகவே அறிந்திருக்கலாம்.வவுனியா,வடக்கிற்கும் கிழக்கிற்கும் நடுப்பகுதி ஆதலினால் இவ்விடமே புலிகளின் அசைவுகளுக்குச் சிறந்ததாகும். வவனியாபாதை திறப்பு க்கான படையெடுப்பு 'வெற்றி நிச்சயம்' என்ற குறியீட்டுப் பெயரிடப்பட்டது எல்லோரும் அறிந்ததே. யாழ்பாணத்தைப் பிடித்த திமிர் முல்லைத்தீவு, பரந்தன், சீனக்குடா, வவுண தீவு எனப்பாரியதாக்குதல்களாலும் அரசு அடங்கவில்லை போல் தெரிகிறது. ஏனெனில் பெயரிலேயே ஆணவம்தொனிக்கிறது. வெற்றிதோல்வி யாருக்கு நிச்சயம்! என்பதைப் பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

வவுனியாவில் புலிகளைப் கட்டியெழுப்புவதில் முக்கிய பங்கை வகுத்தவர் மாத்தயா, என்பதும் குறிப்பிடத்தக்கது.மாத்தையா புலிகளுக்குரிய வளமும், பலமுமேயாகும். இவரின் அரசியல் மறைப்புக்காகச் சொல்லப்படும் காரணம் ஏற்கக்கூடியதாக இல்லை. மாத்தையா இந்தியாவுக்கு உளவுதாரராக இருந்தார்! என்று சொல்லப்படும் காரணம் பகிடிக்குரியதே.தனக்கு நிகரான இரண்டாவது தலைவன் வருவதை பிரபாகரன் விரும்பாமல் இருக்கலாம். உடன்கூடுமலை பற்குணம். இன்னிலையில் மாத்தையா தொடர்ந்து இயங்கிக்கொண்டு இருந்திருப்பாரேயானால் இன்னும் புலிகளின் வலக்கரம் பலப்படுத்தப்பட்டிருக்கும். மாத்தையா, பாலசிங்கம் புலிகளால் கொல்லப்பட்டு விட்டார்கள்! என்ற வதந்தி பரவலாக அடிபடுகிறது. இது கூட புலிகளின் இராஜதந்திரநடவடிக்கைகளில் ஒன்றாகவும் இருக்கலாம். முகம் தெரியாப்பகுதிகளில், இந்தியாவில் தம் நம்பிக்கையானவர்களை வைத்து நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தவும், துப்புத்துலக்குவும் இவர்களை மாறுவேடத்தில் புலிகள் பாவிக்கலாம். பிரபாகரன் மாத்தையாவுக்கிடையிலுள்ள நட்பு மிக ஆழமானது. பாலசிங்கம் பலகாலமாக பிரபாகரனின் அரசியல் ஆலோசகராக இருந்தவர்!

வவுனியாப் படையெடுப்பின் உள்நோக்கம் முக்கியமாக முல்லைத்தீவும் ஒன்றாகும். படைநகர்வதற்கு முன் நடந்த படைக்குவிப்பைப் பற்றி அலசவேண்டியது முக்கியமானது. இது யாழ்பாணநகர்வுபோல் அல்லாது வேவுமுனைகளை முடுக்கி விட்டே நடந்துள்ளது. வெளிப்படையான படைக்குவிப்பு, குவித்த பின்பும் தாமதமான படைநகர்வு போன்றன, ஒரு விடயத்தை மட்டும் தெட்டதெளிவாக விளக்குகின்றன. தாம் படையைக் குவிக்கும் போது புலிகள் எப்படி நகர்கிறார்கள், தம்படையை நகர்த்துகிறார்கள்! என்பதேயாகும். இதேவேளை புலிகள் கைப்பற்றிய ஆட்டிலறிகள் இலகுவாக கொண்டு செல்லக்கூடியவையல்ல. இவை எங்கு உள்ளன? எங்கு நகர்கின்றன? அதைப்புலிகள் வைத்திருப்பது தொடர்ந்து தமக்கு ஆபத்தானது! ஆகவே ஆரம்பத்திலேயே அவற்றைப் கைப்பற்றவேண்டும்! அன்றேல் அழிக்கவேண்டும்! என்பதுவும் நோக்கங்களில் ஒன்றாகும். வவுனியாவில் இருந்து ஓமந்தை வரை ஆமி வெற்றிகரமாக நகர்ந்துள்ளதாக எண்ணலாம் அது தவறானது ஓமந்தை புலிகளின் பலம் கொண்ட பிரதேசம் இதனால் தான் படையினர் முன்னேறமுடியாமல் தவிக்கிறார்கள் வவுனியாவில் இருந்து ஓமந்தை 10 கி.மீ.)

நோர்வேயில் தமிழ்மாதசஞ்சிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.பதிவு இல:90/310-ரி.1.எஸ்.சர்வதேசதர தொடர் இலக்க நிலையம்/யுனெஸ்கோ,பாரீஸில் பதிவுசெய்யப்பட்டது.இல.0805-7443.கணணியால் பிழையின்றி எழுதிய ஆக்கம் உடன் பிரசுரமாகும். தரமான ஆக்கங்கள் (பேட்டி,கவிதை,சிறுகதை,கட்டுரை),புகைப்படங்கள், மாதாமாதம் அனுப்புவோர்க்கு இலவசசந்தா உண்டு

www.tamilarangam.net



நொச்சிமூட்டை 4கி.மீ உள்ளது. ஆமிகடந்து வந்தபாதையில் 3 கி.மீ மனிதரே இல்லாத பிரதேசம்! மீதி புலிகளின் பலமான பிரதேசம் அல்ல. ஆகவே ஆமியின் நகர்வு பெரியசாதனையும் அல்ல. அதேவேளை வெலிஓயாவில் இருந்து நெடுங்கேணிவரை ஆமி நகர்ந்துள்ளது.புலிகளின் வடக்கு கிழக்கு நகர்வுகள், வெலியோயா நெடுங்கேணிக் கிடையில் இருப்பதில்லை. நெடுங்கேணி யூடாகவே தமது சுலபமான நகர்வுகளைச் செய்து வந்தார்கள். காரணம் வெலிஓயாவில் மிகப் பெரிய ஆமிமுகாம் அமைந்திருப்பதே காரணம். நெடுங்கேணியில் இருந்து ஆமி தொடர்ந்து நகருமானால் தான் தெரியும் புலிகளின் பலம். புலிகள் மரபுவழி போராட்டம் வரை வளர்ந்து வ்னோம்! என பலதடவை பெருமைப்பட்டுக்கொண்டவர்கள். யாழ்ப்பாணம் வீழ்ந்ததின் பின்பு தனிமரபுப் போராட்டம்! என்பது முட்டாள் தனமானது என்பதைப் புரிந்துள்ளனர். இதை சர்வ தேசத்தமிழரில் வழிப்போக்கன் குறிப்பிட்டிருந்தமை நினைவு கூரக்கூடியது.

வவுனியாவில் இருந்து ஓமந்தைவரை வந்த ஆமிமரபுப்படையை புலிகள் பங்கர்களின் ஊடாகப் கெரில்லா முறையிலான திடீர்தாக்குதலை நடத்தினார்கள். இது காலத்துக்கு ஏற்றதும் கெரில்லா க்களில் அழிவுகளைக் குறைப்பதுமாகும். நொச்சிமூட்டைப்பாலத்தை ஏன் புலிகள் தகர்காமல் ஆமியை நகரவிட்டார்கள், என்பதை எண்ணிப் பார்ப்போமேயானால் புரியும் புலிகள் வைத்த பொறி!. ஓமந்தையில் பலமான எதிர்ப்பை எதிர்கொள்ளும் ஆமி தொடர்ந்து நகர்வதற்காக ஆயுதக்குவிப்பை அருகிலுள்ள பெரிய முகாமான தாண்டிக்குளத்தில் செய்வார்கள், எனப் புலிகள் எதிர்பார்த்திருந்தனர். முன்புறமாக நகரவிட்டு இடையிலுள்ள நொச்சிமூட்டைப் பாலத்தையும் தகர்த்து, தாண்டிக்குளம் இராணுவமுகாமையும் ஆயுதக்குதத்தையும் தகர்த்து ஆயுதங்களை அபகரித்தும் சென்றுள்ளனர். இடையில் ஊடுருவித்தாக்கியதாலும் பாலம் தகர்க்கப்பட்டதாலும் ஆமியினுடைய முனைப்புத் தடைப்பட்டு பொறியில் சிக்கவைக்கப்பட்டுள்ளது. முன்நகர்ந்த ஆமி பின்னுக்கு உதவிக்கு சுலபமாக வரவியலாது. அதேபோல் பின்னிருந்து முன்னுக்கும் அசைய வியலாது. பக்வாட்டால் புலிகள் பாயலாம்! என்பதனால் பக்கங்களிலுள்ள காடுகளுக்குக் கண்மூடித்தனமாக குண்டு வீசினார்கள். பங்கர்கள் புலிகளுக்கு உதவியாக இருந்திருக்கும். இதே வேளை புலிகள் ஏன் வவுனியா ஓமந்தைக் கிடையில் ஊடுருவித் தாக்கினார்கள்? என்று எண்ணலாம். இதுவும் ஒருவகையில் போக்குக்காட்டலேயாகும். ஏனெனில் நெடுங்கேணி, வெலிஓயா ப்பகுதியிலுள்ள ஆமி அசைவை ஏற்படுத்தக்கூடும் என புலிகளின் எதிர்பார்ப்பு இருக்கலாம். இனி என்ன நடக்கலாம் என ஊகிப்போமானால் பலமிழந்து இராணுவம் சிறிது ஸ்தபித்து நிற்க வேண்டிமிருக்கும். இதேவேளை புலிகள் தமது நகர்வை யாழ்பாணப்பகுதிகளில் முடுக்கி விடுவார்கள். ஆமியும் ஆப்கானிஸ்தானில் நடந்தது போன்று மக்களை மதில்களாக்க, பாதுகாப்பு அரண்களாக்க கைது செய்வர். சிறியமுகாம்கள் மூடப்படும். சிலமுகாங்கள் பெருப்பிக்கப்படும். இன்று அரசு நடத்தும் மரபுப்படையை, கெரில்லாமுறையில் எதிர்கொள்ளும் பாணி பாரியவெற்றியை வியட்னாமில் தந்தது குறிப்பிடத்தக்கது. உலகவல்லரசான அமெரிக்காவே பிச்சை வேண்டாம் நாயைப்பிடி! என ஓட்டம் கண்டது. புலிகள் ஆட்டிலறிகளைப் பாவித்தார்கள்! எனக் கிடைத்த தகவல்கள் பொய்யானது. புலிகள் தமது கீட்சி அஸ்திரமாக அவற்றைப்பாவிக்கலாம், என எதிர்பார்க்கப்படுகிறது. இராணுவத்திடம் இருந்து எடுக்கப்பட்ட பாரிய ஆயுதங்கள் வெகு விரைவில் பாவிக்கப்படும். அவை மீண்டும் ஆமியின்வசம் போவதை கெரில்லாக்களும் அனுமதிக்கமாட்டார்கள். பாரிய ஆட்டிலறிகள் சுலபமாகப் பிடிபடுவதற்குச் சாத்தியங்கள் அதிகம்.வவுனியா நகர்வு, வெறும் பாதை திறப்புக்குரியது அல்ல. புலிகளை அழுத்தங்களுக்கு உள்ளாக்குவதும், பிரபாகரனைப் பிடித்தல், பதுங்குமிடமறிதல் போன்றவையுமாகும். பாதைகளால் நகரமுடியாத இராணுவம் விமானப்படையின் உதவியுடன் காடுகளுக்குள் நகர்வுகளை ஏற்படுத்தலாம். இது உண்மையில் மிகக்கடினமானதே. ஓமந்தையில் இருந்தோ, அன்றி நெடுங்கேணியில் இருந்தோ இனியொரு நகர்வை ஏற்படுத்துவார்களாயின் படைக்குவிப்பு நடக்கலாம். எங்கிருந்து படையை நகர்த்துகிறார்களோ, அங்கே புலிகளின் பெருந்தாக்குதலை எதிர்பார்க்கலாம்.வடக்கில் இதை எதிர்பார்க்கலாம். வடக்கில் அமைதியாக ஆமி நிலைகொள்வதையும், யாழ்மக்களுடனான தொடர்புகள் துண்டிக்கப்படுவதை புலிகள் பலகாலம் விட்டுவைக்க மாட்டார்கள். இந்நிலை நீடிக்குமாயின் புலிகள் யாழ்குடாநாட்டை மீட்க மிகச்சிரமப்பட வேண்டிமிருக்கும். தாண்டிக்குளம் தாக்குதலில் பல இராணுவ இரகசியங்கள் புலிகள் கைகளுக்குப் போயுள்ளதாக அறியப்படுகிறது.

---

சர்வதேசதமிழரில்,வரும் கதைகளின் சம்பவங்கள்,பெயர்கள் யாவும் கற்பனையே! வாசகர்கடிதங்கள் மிகமிக வரவேற்கப்படும்! ஆக்கங்களை மீள்பிரசுரம் செய்யின் இச்சஞ்சிகையை குறிப்பிடுக! தங்கள் விமர்சனம்,ஆலோசனைகள் நமக்கு வழிகாட்டும்! ஆக்கங்கட்கு ஆக்கியோரே பொறுப்பு. திருத்திவெளியிட ஆசிரியருக்கு உரிமையுண்டு. முகவரி மாற்றத்தை உடன் தருக!

www.tamilarangam.net

# நாளும் நடப்பும்

—வழிப்போக்கன்—



1) எவ்வளவு காலமும் நோர்வேயில் வாழ்ந்தாலும் இக்கலாச்சாரத்தை முழுமையாக அறிந்து கொள்ளமுடியாத பல தமிழர்கள் உள்ளார்கள். வெய்யில் காலங்களில் நோர்வேஜியப் பெண்கள் ஆண்கள் குறைந்த ஆடைகள் அணிவர்! ஆனால் மற்றவர்களுக்காக அல்ல.கற்புக்கொண்ட தமிழர் ஏன் பார்க்கிறீகள்? ஏன் தடுமாறுகிறீகள்? கற்புகெட்டது நீங்களா? அவளா? இந்நாட்டுக்கு எம்மை வரவோ பார்க்கவோ சொல்லவில்லையே. அறியாதவர்களிடம் கைகொடுத்து அறிமுகமாவது போல், நன்கு விரும்பும் ஆண்,பெண் நண்பர்கள் கொஞ்சுவது இங்கு வழமையானது. விவாகரத்து ஏற்பட்டால் பிரிந்து சென்று வேறொருவனுடன் வாழ்வது என்பதும் முறையானதும் கூட. அவற்றை மையப்படுத்தி தமது ஆற்றாக்கொடுமைகளை, வக்கிரகுணங்களை வேசைகள், விபச்சாரிகள், இவள் யாருடன் தொடர்பாய் இருந்தாளோ என கதைப்பதென்பது தமிழர்களிடையே -அதுவும் பலகாலங்கள் இங்கே வாழ்ந்தோம்! என்று தம்பட்டம் அடிப்பவர்கள் கூறுவது வேடிக்கையானது, வெட்கக்கேடானதும் ஆகும். கொதிக்கும் வெய்யிலில் கோட்சூட் போடப் பழக்கப்பட்டவர்கள் தானே தமிழர்கள். கற்பென்பது பெண்ணுக்கு மட்டும் உரியது, அதுவும் பாலியல் சம்பந்தமானது என எண்ணுபவர்களை என்ன செய்யமுடியும்.

நோர்வேஜியப் பெண்கள் நண்பிகளை எப்படி நடத்துகிறார்களோ நினைக்கிறார்களோ; அதேபோல் ஆண்களையும் நினைக்கிறார்கள். நிறை வெறியில் கூட தீண்டமுடியாத பெண்களை இங்கு காணலாம். டிஸ்கோ என்றவுடன் தமிழர்கள் நினைப்பதே வேறு! நோர்வேஜியர் டிஸ்கோவுக்குப் போவது தமது காதலருடனோ, நண்பர்களுடனோ, தனியாகவோ ஆடிப்பாடி மகிழ்சியாய் இருக்கவே! மதுபோதையில் கூட, தமிழர்கள் எண்ணும் கற்பை கண்ணியமாகக் காத்துக்கொள்வார்கள்! பாலியல் வயதில் உடல் தொடுகை இருந்தும் உள்ளமிழக்காதவர்கள் நோர்வேஜியப் பெண்கள். சீதை, கண்ணகியர்கள் எல்லாம் இவர்களுடன் எம்மாத்திரம். சில தமிழர்களுடைய தொடர்புகள் தரங்குறைந்த நோர்வேஜியப் பெண்களுடன் இருப்பதனால் எல்லோரும் ஒரேமாதிரியானவர்கள் என எடைபோடுவது தப்பானது.

2) வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான். <u>சர்வதேசத்தமிழர் சஞ்சிகைக்கு சந்தாகட்டி ஆதரவுதரும் அனைவருக்கும் எமது நன்றிகள்.</u> ஆனால் எத்தனையோ இதழ்கள் இலவசமாகக் கிடைத்தும் தமிழ்பணிக்கு உதவ மனமில்லாமல் இருக்கின்றனர் சிலர். நோர்வேயில் எதற்கும் காசுதான். ஓசியில் இங்கு ஒன்றும் செய்ய இயலாது.கிடைக்காதவர்கள் தேடி வாசிக்கிறார்கள். கிடைத்த சிலர் கிடைக்கவில்லை என்கிறார்கள். சந்தாகட்ட வேண்டும் என்பதனால் போலும்!. இதற்குள் வியாக்கியானங்கள் வேறு! ஒரு சர்வதேசத்தமிழர் இதழுக்குக் கட்டும் பணம் சில குரோண்கள் மட்டுமே. இதற்கு பிள்ளைகளுக்குக் கூட ஒரு ஐஸ்கிறீம் வாங்கிக் கொடுக்க இயலாது.இந்த இதழால் நீங்கள் அறிவன,மகிழ்வன ஏராளம்.<u>இவ்விதழ் தொடர்ந்து வர உதவுங்கள்!</u>!இரண்டு பக்கட் சிகரெட் பக்கட்டின் விலை ஒருவருடச்சந்தா! அது உங்களை அழிக்கிறது, இது உங்களை ஆக்குகிறது!!!

3) நபர் ஒருவர் கலை இலக்கியங்களுக்கு உதவுவதை விட நல்லாக இறைச்சி அது, இது என வாங்கிச்சாப்பிடலாம் என்றாராம்? இந்த சாப்பாட்டு இராமனுக்கு அரிசி மூட்டைகளை அன்பளிப்பாய் கொடுத்தால் எப்படியிருக்கும். மேலால் அனுப்பி கீழால் தள்ளிக்கொண்டு இருப்பாருக்கு. இவர்கள் வாழ்க்கையில் என்னத்தைத்தான் சாதிக்கப் போகிறார்களோ? தின்டதுதான் மிச்சம்.போங்கடா! போங்க!

4) பணமென்றால் பிணமும் வாய்திறக்கும் என்பார்கள். பணம் வாழ்க்கைக்கு அவசியமான ஒன்றுதான். ஆனால் இப்பணம் குடும்பக்குலைவுகளுக்குக் காரணமாகி விடுகிறது. எனது பணம், எனது பொருள் எனஆகிவிடுவதால், எனது கணவன், மனைவி என்ற நிலை குலையத் தொடங்கி படுக்கை மட்டுமே பொதுவென வந்து விடுகிறது. இருவரும் வேலைக்குப்போவதே காரணம்! எனப்பலர் குறைப்பட்டனர். பெண்களும் வேலைக்குப் போவது முக்கியமானது. போதுமென்ற மனமே பொன் சொரியும் மருந்து! என்ற தத்துவத்தை மனதில் கொள்வது அவசியம். பொருளை மட்டுமா சிலர் போதாது! என்கிறார்கள். ஒருகணவன், ஒருமனைவி என்பதே போதாது எனவல்லவா நிற்கிறார்கள். இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சைதான்.

5) சமவுரிமை கொண்டது நோர்வேஜிய நாடு. ஆண்களைவிட சிலவிடங்களில் பெண்கள் மிகத்திறமைசாலிகளாக உள்ளனர். பாலியலை மட்டும் கருத்தில் கொண்டு பெண்சமூகத்தின் திறமைகளை மழுங்கடித்துப் கொண்டிருக்கின்றன பல கலாச்சாரங்கள். முக்கியமாக தெற்கு, கிழக்கு, தென்கிழக்குஆசியநாடுகள்,அநேகமான முஸ்லீம் நாடுகளை இங்கு குறிப்பிடலாம். சம உரிமையை ஆண்டவன் கூட எண்ணத்தொடங்கிவிட்டார்போல் தெரிகிறது.

விடையே மட்டுமல்ல, தமிழர்களிடையேயும் உருவத்தில் மாற்றம் தெரிகின்றன. ஆண்கள் தலை வளர்த்துக் குடும்பி கட்டிப் பூ வைக்காத குறைதான். கடுக்கன், மூக்குமின்னி எனப்போய் கொண்டிருக்கிறது. ஆண்கள் பிள்ளைப்பெறும் நிலை வந்தாலும் சந்தேகப்படுவதற்கில்லை. பெண்கள் குட்டையாய் வெட்டுகிறார்கள். முருகா! போதுமப்பா சமவுரிமை. போதாதப்பா பிள்ளைப் பெற, வித்தியாசமே தெரியவில்லையப்பா?

6) கார்சாரதி பரீட்சைக்கு வெளிநாட்டவர்கள் மொழிபெயர்ப்பாளரைப் பாவிப்பது வழக்கம். மொழிபெயர்ப்பாளர் ஒருவர் 500குரோன்கள் இலஞ்சமாகப் பெற்று பிழையாய் சொன்ன பதில்களை சரியாக்கி மொழிபெயர்த்த விடயம் பிடிக்கப்பட்டு சந்திக்கு வந்துள்ளது. மொழிபெயர்ப்பாளருக்கு கடுமையான தண்டனை வழங்கப்படும்! என எதிர்பார்க்கப்படுகிறது. இவர்கள் செய்த தவறு, என்ன வெனில் பிழையாக மொழிபெயர்த்தது மட்டுமல்ல. இலஞ்சமும் வாங்கியதே.

7) மருந்துகளை வென்று வாழக்கூடிய மரணத்தைத் தரும் பற்றீரியா நோய் ஒன்று நோர்வேயை நோக்கி நகர்கிறதாம். வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொண்டவர்கள் கவனமாக இருக்கவேண்டும் என எச்சரிக்கப்படுகின்றனர். நோவேஜியர் இதை, புதிய ஸ்பான்ச சீக் என்பர்.

8) சோசல்நிலையங்களிலே, திறிக்ட குந்தூர்களிலே(உதவி செய்யும் நோவேஜியஅமைப்புகள்) தமிழர்கள்; வெளிநாட்டவர்கள் பொய்சொல்லிப் பணம் பிடுங்குவதும், சுரண்டுவதுமாய் உள்ளார்கள். இதற்குள் தமிழ் வெளிநாட்டு அமைப்புகளும் வேறு. இவை சட்டவிரோதமானது! என உரைத்தால் எத்தனை பேர் செய்கிறார்கள்! நாம் செய்தால் என்ன? என்றல்லவா கேட்கிறார்கள். ஒருவன் தற்கொலை செய்யக்கிணற்றினுள் பாய்கிறான்! என்றால் மற்றவர்களும் பாய்வதா? நீதியையும், நேர்மையையும் கட்டிக்காக்க வேண்டிய மன்றங்களே அவற்றை அழிப்பதற்கு வழிகாட்டியாக இருந்திருக்கின்றன. எமது சமூகம் எந்தப்பக்கமாக வளர்கிறது? என சிந்தித்துப் பாருங்கள். கெடுவது மட்டுமல்ல! கெடு கிறன் பிடி பந்தயம்!! என நிற்கிறார்கள். வழிகாட்டிகளாக இருக்கவேண்டிய முன்னோடிகளே வழிதவறுவதும், சட்டவிரோதமான செயல்களுக்கு உடன்போவதுமாய் உள்ளார்கள். இது சிலவேளை மாமி உடைத்தால் மட்பாண்டம், மருமகள் உடைத்தால் பொற்பாண்டம்! என்ற நிலைக்குள் வந்து விடுகிறதோ? எல்லாம் அந்த பரம்பொருளுக்குத்தான் வெளிச்சம். நோவேஜியர் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? 'நாங்கள் தமிழர்கள் யாரையும் வலிந்து அழைக்கவில்லை! சட்டவிரோதமாகத்தான் பலர் வந்தீர்கள்! இரங்கி இடங்கொடுத்தால், கொடுத்தவன் கைகளைக் கடிக்கிறீர்களே! எமது சட்டம் எமக்காகவே எழுதப்பட்டுள்ளது. எமது சட்டம் உங்களுக்கு மிக மிகக்குறைவானதே. இப்போ உங்களுக்கும் சேர்த்து சட்டஅமைப்புத் தயாரிக்கவேண்டிய நிலை எங்களுக்கு வந்துள்ளது. உமது சுரண்டல்களை உங்கள் நாட்டிலிருந்தோ,அங்கு சென்றோ செய்யுங்கள். உங்கள் உழைப்புக்கூட எமக்குத் தேவையில்லை! காரணம் போதியளவுவேலையில்லா திண்டாட்டம் இங்குள்ளது!

9) நோவேஜியர்களின் விவாகரத்தை விட தமிழரிடையே விவாகரத்து அதிகரித்து வருகிறது. குடும்ப வீதாசாரப்படி தமிழர்களினது கூட இருக்கலாம். இதற்குக் காரணம் பிரிந்து போவதற்கான வசதியதிகரிப்பா? பணமா? வழிகாட்டிகள் இல்லாமையா? வழிகாட்டிகளே பிழையானவழியைக் காட்டுவதாலா? சிலதமிழ் ஆண்கள் குறைப்பட்டுக் கொண்டார்கள், நாம்கஸ்டப்பட்டு கூப்பிட்டு விட பெண்டுகள் ஓடுகிறார்கள். இனிமேல் பிலிப்பைன், தாயிலாந்தில் இருந்து இறக்குமதி செய்தால்தான் சரி என்று.

10) போர் காரணமாக யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் வவுனியாவுக்கு வந்தவர்கள். இப்போ வவுனியாவில் இருந்து மீண்டும் இடம்பெயரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பட்டகால்லே படும்! கெட்டகுடியே கெடும்!! என்பதற்கு இது உதாரணமாகி விட்டது.

11) தமிழ் கலைக்கூடம் கட்டிடம் ஒன்றை வாங்கவுள்ளது. தற்போது வாடகைக்கு எடுத்து சனிக்கிழமைகளில் நடத்திவருகிறார்கள். பிள்ளைகளிடம் 10000 குரோன்கள் அறவிடுகிறார்களாம். சில பெற்றோர் இப்படிக்குறைப்பட்டுக் கொண்டார்கள்: ஒருநாள் நடத்தும் பள்ளிக்கூடத்துக்கு 10000 குரோண்களா?'இது ஒருநாள் கூத்துக்கு மீசை வழித்தவன் போலல்லவா இருக்கிறது.

12) இரஸ்சியாவின் இரசாயன ஆயுதக்குதம் நோர்வேயை அண்மித்த எல்லையிலுள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதேவேளை ஆபத்தான கதிர்வீச்சுக்களைக் கொண்ட அணுவுலைகளும் எல்லைகளுக்கருகில் உள்ளன. இரசாயனத்தாக்கங்களாலோ, அணுவுலைக்கசிவினாலோ பாரிய அழிவு ஏற்படலாம். போருக்கென்று பயந்து இங்கு ஓடிவந்தோம். வந்த இடத்திலும் தாயகத்தை விட பாரிய அழிவை எதிர்பார்த்து நிற்கிறோம். பாவிகளைப் பரந்தாமன் விடுவதாய் தெரியவில்லை!

சர்வதேசதமிழருக்கு சந்தாகந்தோர்க்கு இதயநீர்வதன்றிகள்!மற்றையோர்தொடர்ந்து பெற விரும்பின் சந்தா தந்து பதியுங்கள்!
உலக தமிழ்ப்பத்திரிகை/சஞ்சிகைகள்,நூல்கள் மாற்றுத்திட்டத்தில் பங்குகொள்ளவிரும்பின் உங்கள்வெளியீட்டை அனுப்புக!
முகவரியுடன் அறிமுகமாகும்! சர்வதேச தமிழரையும் உங்கள் இதழில் முகவரியுடன் அறிமுகம் செய்ய மறக்கவேண்டாம்!

www.tamilarangam.net

www.tamilarangam.net



## சர்வதேசதமிழர் களம்:

**அன்புடையீர்,**

வணக்கம். எமது தமிழுக்கு சேவைசெய்யும் நிறுவனமான நியூசெஞ்சரி புக்ஹவுஸ் பற்றி சர்வதேசதமிழரில் பிரசுரித்து உலகமெங்கும்தமிழ்நூல்கள்,பரவஉதவிசெய்யுங்கள்.புலம்பெயர்ந்தநாடுகளைச்சேர்ந்த தமிழர்கள் எழுதியுள்ள நூல்களை, தமிழகத்தில்,கிடைக்கச்செய்யவிரும்புகிறோம்.அந்நூலாசிரியர்கள்,எங்கள்நிறுவனத்துடன்,தொடர்புகொள்வதன்,மூலம் அவர்களது நூலைவிற்பனைசெய்வதில் எங்கள்நிறுவனம்உதவமுடியும்.தங்களைப்பற்றி குமுதம் ஆசிரியர் திரு.மாலன் அவர்களும், இலங்கை தமிழ்சங்கபொதுசெயலாளர் திரு.க.இ.க.கந்தசாமி அவர்களும் அறிமுகம் செய்துவைத்தார்கள். எம் வாழ்த்துக்கள்!

என்.சி.பி.எச் என்று அன்புடன் அழைக்கப்படும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் முற்போக்கு சிந்தனையும், தியாக உணர்வும் கொண்ட அறிஞர்களால் 1951-ம் ஆண்டு ஜுன் திங்கள் முதல் நாள் தொடங்கப்பட்டது.

கடந்த 47 ஆண்டு களாகத் தமிழ்ப் பணியாற்றி வருகிறது.

21 கிளைகளையும், இரண்டு நடமாடும் புத்தக நிலையங்களையும் கொண்ட ஒரே தமிழ் பதிப்பகம் என்.சி.பி.எச் ஆகும்.

நூல்களைப் பதிப்பித்தல், அச்சிடுதல், விற்பனை செய்தல், இறக்குமதி, ஏற்றுமதி ஆகிய துறைகளில் பல்லாண்டுகளாகத் தமிழ் மக்களுக்கும் தமிழ் நூல் பதிப்பகத்தாருக்கும் சேவை செய்தும் வருகிறோம்.

ஆண்டுதோறும் எங்கள் நூல்களுக்கு மாநில, மற்றும் மைய அரசுகளின் பரிசுகள் கிடைத்து வருகின்றன. தமிழகத்திலுள்ள அனைத்து பல்கலைக் கழகங்களிலும் தமிழ் பயிற்றுவிக்கின்ற தென்னிந்திய பல்கலைக் கழகங்களிலும், இந்தியாவின் தலைநகரத்திலுள்ள தில்லி பல்கலைக்கழகத்திலும் எங்கள் நூல்கள் பாட நூல்களாக பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

மைய அரசின் பள்ளிகளில் 11வது வகுப்பிற்கு எங்கள் நூல்கள் பாடநூல்களாக வைக்கப்பட்டுள்ளன.

தொழில் நுட்ப அறிவியல் நூல்களைத் தமிழில் பதிப்பிக்க பிறபதிப்பகத்தார் தயங்கிய காலத்தில், எங்கள் நிறுவனம் மருத்துவம், தொழில் நுட்பம், அறிவியல், பொறியியல் நூல்களை பதிப்பித்து சாதனை படைத்தது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஏற்றுமதிக்கு ஏற்றவகையில் நூல்கள் அச்சிடுகின்ற சிறந்த அச்சகம் ஒன்றை நடத்தி வருகிறோம்.

மேற்கண்ட நிறுவனங்களின் செயல்பாடுகளை வைத்து தமிழக அரசின் நூல்களை விற்பனைசெய்யும் ஒருமுக விற்பனையாளராக எங்கள் நிறுவனத்தை 14.11.96 லிருந்து நியமித்துள்ளனர்.

நல்ல நூல்களை மக்கள் வசிக்கும் இடங்களுக்கே நேரடியாகவும், கண்காட்சி மூலமும் கொண்டு சென்று விற்பனை செய்து வருகின்றோம். மக்களிடம் படிக்கும் பழக்கத்தை வளர்ப்பதில் முன்னோடியாக செயல்பட்டு வருகின்றோம். இந்திய தேசிய புத்தக அறக்கட்டளையும், இலங்கை தேசிய நூல் அபிவிருத்திசபையும் இணைந்து இலங்கை - இந்திய நூல்கள் கண்காட்சி ஒன்று 1996 நவம்பர் 12 முதல் 18 வரை இலங்கையில் நடத்தின.

இந்தியாவிலிருந்து தமிழ் நூல் பதிப்பகத்தார் என்கிற முறையில் எங்கள் நிறுவனத்தையும், தில்லியிலிருந்து 7 ஆங்கில நூல் பதிப்பகத்தாரையும் அழைத்திருந்தனர்.

இலங்கையில் கொழும்பு, கண்டி, திரிகோணமலை ஆகிய இடங்களில் தமிழ்நூல் கண்காட்சி மட்டும் நடத்தி, நூல்களை விற்பனை செய்தோம். நாங்கள் கொண்டு சென்ற அத்தனை நூல்களும் கண்காட்சியில் விற்பனையாகிவிட்டன.

எங்கள் நிறுவனம் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நூல்களைப் பதிப்பித்திருந்தாலும், எங்கள் சொந்த வெளியீடுகள் 464 தலைப்புகளிலும் 137 பிற வெளியீட்டாளர்களின் நூல்களை 536 தலைப்புகளிலும் கொண்டு சென்று விற்பனை செய்தோம்.

www.tamilarangam.net



அதுபோல உங்கள் நாட்டிலும் புத்தங்களை விற்பனை செய்ய விரும்புகிறோம். புத்தகக் கண்காட்சி நடத்த உங்கள் நாட்டின் அரசாங்கத்தின் அழைப்பிதழ் மற்றும் உதவிகள் செய்ய வேண்டுகிறோம்.

உங்கள் நாட்டில் எந்தவிதமான நூல்களுக்கு மக்களின் வரவேற்பு உள்ளது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறோம். உங்கள் நாட்டில் பதிப்பித்துள்ள தமிழ் நூல்களின் பட்டியல் ஒன்று அனுப்பி வைக்கும்படி வேண்டிக்கொள்கிறோம். மேலும் தங்கள் நாட்டில் வெளிவருகின்ற நாளிதழ் மற்றும் சஞ்சிகைகளின் முகவரிகள், தொலைபேசி, பேக்ஸ் ஆகியவைகளின் விபரங்களை அனுப்பி வைக்கவும். தங்களின் மரியாதைக்குரிய செல்வாக்கைப் பயன்படுத்தி, அரசின் அழைப்பிதழ் மற்றும் அரசு உதவிகிடைக்கச் செய்யும்படி வேண்டிக் கொள்கிறோம். உங்கள் நாட்டில் பதிப்பித்துள்ள தமிழ்நூல்கள் அனைத்தும் இந்திய மக்களுக்கு கிடைக்கச் செய்வதன் மூலமும், இந்தியாவில் பதிப்பித்துள்ள தமிழ் நூல்கள் உங்கள் மக்களுக்குக் கிடைக்கச் செய்வதின் மூலமும், நாம் கலை, இலக்கியம், பண்பாடு ஆகிய துறைகளில் நம்மிரு நாட்டிற்கும் பாலமாக அமைய முடியுமென்று நம்புகிறோம்.

தங்களின் அன்பான பதிலையும், அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் எங்கள் நிறுவனம் நாடுகிறது.

உலகம் முழுவதும் பரவிக் கிடக்கின்ற தமிழர்களிடையே உள்ள தொடர்பினை வலுப்படுத்த வும் அவர்களை ஒருங்கிணைக்கவும், அனைத்து துறைகளிலும் தமிழர்கள் மேம்பாடு அடையவுமான பணிகளை மேற்கொள்வதற்காக எங்கள் நிறுவனம் பதிப்பித்த நல்ல/சிறந்த நூல்களை மக்களிடம் கொண்டு செல்ல உங்கள் உதவியினை நாடுகிறோம்.



தங்கள் உண்மையுள்ள

மே.சுப்பிரமணியன்

செயலாளர்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,
41-பி, சிட்கோ இன்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 098.
தொலைபேசி - 6258410, 6251968.


**TOLLVESENETS GRØNNE LINJE**

**800 8 12 12**



Skal du ut å reise i sommer? Vet du hvilke varer du har lov å ta med deg toll- og avgiftsfritt hjem til Norge? Ring gratis Tollvesenets grønne linje. Informasjonstelefonen er automatisk, og du kan ringe hele døgnet. Du kan få tilsendt brosjyren «Tollbestemmelser for reisende til og fra Norge». Vi er også på Internett og Tekst-TV. Har du andre spørsmål, ring ditt lokale tollvesen. GOD SOMMER!

**Internett-adresse: http://www.toll.interpost.no**

TOLL Toll- og avgiftsdirektoratet

A-16/97

Innrykket av Statens informasjonstjeneste

**சுங்கஇலாகாவின் திறந்த தொலைபேசி: 800 8 12 12**

கோடையில் வெளிநாட்டுக்கு பிரயாணம் செய்ய விரும்புகிறீர்களா?நோர்வேக்குள் எவ்விதபொருட்களை சுங்கவரி,தீர்வையின்றி எடுத்துவரலாமென உங்கட்கு தெரியுமா? சுங்கஇலாகாவின் திறந்ததொலைபேசிக்கு இலவசமாக சுழற்றுங்கள்.இத்தகவல் தொலைபேசி தானியங்கக்கூடியது. எனவே நாள்முழுவதும் சுழற்றலாம்.நோர்வேக்குள் வரல்,வெளியேபோதலின்போது சுங்கவிதிமுறைகள்-பற்றிய கைநூல் நீங்கள் பெறமுடியும்.இன்ரநெற்,ரெக்ஸ்ற் ரிவியிலும் எமதுபகுதி உண்டு வேறு ஏதாவது கேள்விகளிருப்பின் உள்ளூர் சுங்கபிரிவுடன் தொடர்புறுக! மகிழ்வான கோடை வாழ்த்துக்கள்!

இன்ரநெற் முகவரி: http://www.toll.interpost.no

**சுங்க-தீர்வை இயக்குனர்**

–அரசதகவல் சேவையால் வழங்கப்பட்டது.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

To: SARVADESA TAMILER (e.mail:nsp@sn.no) ISSN:0805-7443

சர்வதேச தமிழர்
C-BLAD

Editor/Publisher:N.S.Pirabu
L.Hervigs veien 69A,
3035 Drammen,Norway

Norges Tamiltidsskrift for informasjon,kunnskap,kultur og solidaritet! Tel./Fax.00.47.32.813416
Subscription:Scandinavia:90,-kr/yr ,Other countries:15,-USD; Postbanken a/c:05320899453

Abonnement:90,-Nkr løssalg:15,-Nkr ISSN:0805-7443 1997 June /Vol.4,Nr.5


# திட்ட,கட்டிட சட்டத்தில் மாற்றங்கள்

**01.07.1997 இலிருந்து சகல கட்டிடவிடயங்களுக்கும் பொருந்தும்.**

உள்ளூராட்சி கட்டிடவிடயங்கள்கையாள்கை மாற்றமடைந்துள்ளது.முன்கூட்டியகலந்துரையாடல் பற்றிய விதிகள்,படிப்படியான விடயகையாள்கை,வகைப்படுத்தப்பட்ட விடயகையாள்கை,விரிவுபடுத்தப்பட்ட விண்ணப்பகடமை,விண்ணப்பத்திற்குரியஆதாரங்கள்,திருத்தஅறிவுரையை கண்காணிக்கும் சந்தர்ப்பம்(உதாரணமாக கட்டாயதண்டம் போன்றவை) என்பன இதில் அறிமுகமாக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி கட்டிடகண்காணிப்புக்கு பதிலாக,தத்தம்கம்பனிகளால் அல்லது ஒரு சுயாதீனகம்பனியால் கண்காணிப்பு,நடைமுறை,தீவிரப்படுத்தப்படும்.

மேலும் பொறுப்புவிதிகளிலும் மாற்றம் உண்டு.இனிமேல் திட்டஅமுலாக்கலுக்கும் பொறுப்புரிமை உண்டு. தனிப்பட்டவர்களுக்கன்றி கம்பனிக்கே பொறுப்பு வழங்கப்படும்.பல்வேறுநிலைகளிலும் யார்பொறுப்பு, என்பதை காட்டும் பொறுப்புக்கடமைகள் தெளிவாக வரையறுக்கப்படவேண்டும்.

பொறுப்புரிமையாளர் தகுதியுள்ளவராக இருப்பதை உறுதிசெய்ய,தகுதிகாண் அங்கீகாரவிதி புகுத்தப்படும்.

அதிக தொழிற்பாடுகுறித்த தேவையுடனான புதியதொழில்நுட்பகட்டிடவிதி,விடயகையாள்கை-கண்காணிப்பு பற்றியவிதி,திட்டகட்டிடசட்டத்துக்கமைய பொறுப்புரிமையுடனான கம்பனிபற்றிய அங்கீகாரவிதி,அங்கீகாரவிதியை ஒழுங்குபடுத்தல் பற்றியவிதி என்பன தீர்மானம் செய்யப்பட்டுள்ளது.விதிகள் சட்டமாற்றத்துடன் ஒரேசமயத்தில் அமுக்குவரும்.பல தீர்மானங்கட்காக தற்காலிகதீர்மானங்கள் உள்ளன.

**மாற்றங்கள்** பற்றிய,மேலதிகதகவல்கள் கொம்யூனில் பெறலாம்.

**உள்ளூராட்சி,தொழில்வாய்ப்பு அமைச்சு**

அரசதகவல்சேவை பிரசுரம் அ-1.97

# Endringer i plan- og bygningsloven

## GJELDER ALLE BYGGESAKER FRA 1. JULI 1997

Kommunal byggesaksbehandling blir endret. Det blir bl.a. innført regler om forhåndskonferanse, trinnvis saksbehandling, typebestemt saksbehandling, utvidet søknadsplikt, dokumentasjon i søknaden og mulig-heten til å følge opp pålegg om retting, bl.a. ved tvangsmulkt.

Kontrollen skal styrkes og kan utføres av foretakene selv eller av et uavhengig foretak, i stedet for en kommunal bygningskontroll.

Videre blir det endringer i ansvarsreglene. Det blir nå ansvarsrett også for prosjekteringen. Ansvaret gis til foretak, ikke personer. Det skal komme klart frem av ansvarsoppgaver hvem som har ansvaret for de forskjellige fasene.

For å sikre at de som skal ha ansvarsrett er kvalifisert for oppgaven, innføres det en godkjenningsordning med kvalifikasjonskrav for disse.

Det er vedtatt ny teknisk byggeforskrift med mer funksjonsrettede krav, forskrift om saksbehandling og kontroll, forskrift om godkjenning av foretak mv for ansvarsrett etter plan- og bygningsloven samt forskrift om organiseringen av godkjenningsordningen. Forskriftene trer i kraft samtidig med lovendringene. For mange bestemmelser er det overgangsbestemmelser.

**Nærmere opplysninger om endringene fås ved henvendelse til kommunen.**

**KOMMUNAL- OG ARBEIDSDEPARTEMENTET**

A-1/97

Innrykket av Statens Informasjonstjeneste

Cicero Grafisk AS


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்